# பொருளாதார அளவீடு
# 1989 இன் முதலரைப்பகுதி

இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அளவீடு
# 1989 இன் முதலரைப்பகுதி

இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அளவீடு — 1989இன் முதலரைப்பகுதி

உள்ளடக்கம் பக்கம்


1. பொதுவான போக்குகள் ... ... ... ... 1

2. வேளாண்மை ... ... ... ... ... 3
   தேயிலை ... ... ... ... ... 4
   இறப்பர் ... ... ... ... ... 6
   தெங்கு ... ... ... ... ... 8
   நெல் ... ... ... ... ... 11
   சிறு உணவுப் பயிர்கள் ... ... ... ... 11
   சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ... ... ... ... 13
   விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டம் ... ... 13

3. கைத்தொழில் ... ... ... ... ... 14
   அரசதுறைக் கைத்தொழில் ... ... ... 14
   தனியார்துறைக் கைத்தொழில் ... ... ... 15
   முதலீடு ... ... ... ... ... 15
   கைத்தொழில் கொள்கை ... ... ... ... 16
   சுற்றுலா ... ... ... ... ... 17

4. பொருளாதார, சமூக நலன்புரிச்சேவைகள் ... ... ... 18
   வலு ... ... ... ... ... 18
   போக்குவரத்து ... ... ... ... 20

5. விலைகள் ... ... ... ... ... 23
   கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (கொ. நு. வி. சு.) ... 23
   மொத்த விலைச்சுட்டெண் (மொ. வி. சு.) ... ... 24
   ஏற்றுமதிப் பண்டவிலைகள் ... ... ... ... 25

6. வர்த்தகமும், சென்மதி நிலுவையும் ... ... ... 29
   பொதுவான போக்குகள் .. ... ... ... 29
   வணிக வர்த்தகம் ... ... ... ... 30
   பணிகளும் மாற்றல்களும் ... ... ... ... 34
   மூலதனப் பாய்ச்சல்கள் ... ... ... ... 34
   திரண்ட நிலுவையும் வெளிநாட்டுச் சொத்துக்களும் ... ... 35
   படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... ... ... 35

7. அரச நிதி ... ... ... ... ... 37
   அரசின் படுகடன் ... ... ... ... 40

8. பணமும், கொடுகடனும்... ... ... ... ... 41
   பண நிரம்பல் ... ... ... ... 41
   வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மை நிலைமை ... ... 44
   நாணயக் கொள்கை ... ... ... ... 46
   வங்கி விரிவாக்கம் ... ... ... ... 48
   முகவர் வங்கித்தொழில் ... ... ... ... 48
   1988இன் எண் 30 கொண்ட வங்கித்தொழில் சட்டத்தின் கீழான
   தீர்மானங்களும் பணிப்புரைகளும் ... ... ... 49


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அளவீடு
# 1989 இன் முதலரைப்பகுதி

## 1. பொதுவான போக்குகள்

முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியின் பொருளாதாரச் செயற்பாட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து, 1989இன் முதலரைப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றமானது அடையப்பட வேண்டிய விருப்பத்தினை அதிகளவில் நிறைவேற்றவில்லை. வேளாண்மைத்துறையின் உற்பத்தியானது பாரதூரமான பின்னடைவுகளைக் கொண்டிருந்ததுடன் கைத்தொழிற்றுறையின் உற்பத்தியும் பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளையில் வரவு செலவுத்திட்டச் செயற்பாடுகளும் 1988 இன் முதல் 6 மாதகாலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து குறிப்பிடத்தக்களவு மோசமான தன்மையினை எடுத்துக் காட்டின. பணநிரம்பல் வளர்ச்சிவீதத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமானது வரவேற்கப்படத்தக்கதொன்றாகக் காணப்பட்டபோதிலும், இது சென்மதி நிலுவையில் ஏற்பட்ட அதிவேக வீழ்ச்சியாலும், உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கலில் காணப்பட்ட தாமதமான போக்கின் காரணமாகவுமே பெறப்பட்டது. கடந்த ஆண்டின் நேரிணையான காலப்பகுதியுடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து, பொதுவாக விலைமட்டத்தில் குறைவான அழுத்தமே காணப்பட்டது.

வேளாண்மைத்துறையில் தெங்கு தவிர்ந்த ஏனைய எல்லாவகையான பிரதான பயிர்களினதும் உற்பத்தியில் வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டது. 1989இன் முதற்காலாண்டில் நிலவிய வரட்சி நிலைமையே இதற்கான முக்கிய காரணமாகும். மேலும் நாட்டில் காணப்பட்ட அமைதியின்மை காரணமாக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஏற்படுத்தப்பட்ட தாக்கமும் இத்துறையின் உற்பத்தி வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது. தேயிலை, இறப்பர் என்பனவற்றின் உற்பத்தி முறையே 20 சதவீதத்தாலும், 11 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்த வேளையில் 1988/89 பெரும்போகத்தின்போது நெல் உற்பத்தியானது 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், கடந்த ஆண்டின் நேரிணையான காலப்பகுதியில் காணப்பட்ட தாழ் மட்டத்திலிருந்து 34 சதவீத அதிகரிப்பினை தெங்கு உற்பத்தி பதிவுசெய்தது.

1989இன் முதலரைப்பகுதியில் கைத்தொழில்துறையின் உற்பத்தியளவானது உண்மை நியதிகளில் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது தனியார்துறை கைத்தொழில் உற்பத்தியில் ஏற்பட்ட 9 சதவீத அதிகரிப்பினதும், அரசதுறை கைத்தொழில் உற்பத்தியில் ஏற்பட்ட 18 சதவீத வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும். நாட்டில் அமைதியின்மை காரணமாக உற்பத்தி தடைப்பட்டமையும், ஊழியர்கள் வேலைக்குச் சமூகமளிக்காததும் இந்த சாதகமற்ற அபிவிருத்திக்குத் துணைசெய்த காரணிகளாகக் காணப்பட்டன. மேலும் 1989இன் ஆரம்பகாலத்தில் பேணல் நோக்கங்களுக்காக வேண்டி பெற்றோலிய தாய்மி மூடப்பட்டமையும் பொதுவான கைத்தொழில் உற்பத்தியளவின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

1983இலிருந்து அவதானிக்கப்பட்டுவந்த போக்கின் தொடர்ச்சியாக சுற்றுலாக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகள் பெரும்பாலும் சோர்வடைந்தே காணப்பட்டன. 1989 இன் முதலரைப் பகுதியில் சுற்றுலாவுக்காக வந்தவர்களின் எண்ணிக்கை 78,030ஆகக் காணப்பட்டதோடு முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியைவிட 18 சதவீத வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பமும் பிரதிகூலமான பாதுகாப்பு நிலைமையுமே இந்தச் சாதகமற்ற அபிவிருத்திக்குப் பொறுப்பான முதற்காரணிகளாகக் காணப்பட்டன.

1989இன் முதலரைப்பகுதியில் நுகர்வோர் விலைகளின் அதிகரிப்பு வீதமானது முன்னையஆண்டின் நேரிணையான காலப்பகுதியைவிட குறைவாகவே காணப்பட்டது. 1989இன் முதல் ஆறு மாதகாலப்பகுதியில் கொழும்பு நுகர்வோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைச்சுட்டெண் 1988இன் சராசரி மட்டத்தைவிட 7.1 சதவீதத்தினால் உயர்ந்து காணப்பட்டது. 1988இன் நேரிணையான அதிகரிப்பு 10.9 சதவீதமாகக் காணப்பட்டது. இம்முன்னேற்றமானது உணவுப் பொருட்களின் விலைகளின் அதிகரிப்பு வேகத்தில் காணப்பட்ட தணிந்த தன்மையின் பாரிய விளைவாகும். இதேவேளையில் முதலாந்தர சந்தை மட்டத்தில் விலைகள் மொத்த விற்பனவுச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டபடி, 1989இன் முதல் நான்கு மாதங்களில் மிகக் குறைந்த அதிகரிப்பான ஒரு சதவீதத்தையே பதிவுசெய்தன. தேங்காயினதும், தேங்காய் எண்ணெயினதும் விலைகளில் ஏற்பட்ட 25 சதவீதத்துக்கும் மேற்பட்ட வீழ்ச்சியானது நெல், பயறு வகைகள், செத்தல் மிளகாய் என்பனவற்றின் விலை அதிகரிப்பினால் ஏற்பட்ட தாக்கத்தைப் பெரும்பாலும் முழுமையாகவே எதிரீடு செய்தமையே மொத்த விலைகளின் குறைவான அதிகரிப்புக்கான முக்கிய ஏதுக்காரணியாக அமைந்தது

ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் சென்மதி நிலுவையின் செயலாற்றம் மேலும் மோசமான நிலைமையையே காட்டியது. 1989இன் முதலரைப் பகுதியில் வர்த்தகப் பற்றுக்குறையின் மதிப்பீடு 1988இன் முதலரைப் பகுதிக்கான 2,830 இலட்சம் சிறப்பு எடுப்பனவு உரிமையிலிருந்து (ஏறத்தாழ ரூ. 119,790 இலட்சம்) 2,930 இலட்சம் சிறப்பு எடுப்பனவு உரிமையாக (ஏறத்தாழ ரூ. 127,490 இலட்சம்) விரிவடைந்து சென்றதுடன் நடைமுறைக் கணக்கின் பற்றுக்குறையானது 1,540 இலட்சம் சிறப்பு எடுப்பனவு உரிமையிலிருந்து (ஏறத்தாழ ரூ. 65,400 இலட்சம்) 1,730 இலட்சம் சிறப்பு எடுப்பனவு உரிமையாக (ஏறத்தாழ ரூ. 74,970 இலட்சம்) விரிவடைந்து சென்றது. மூலதனக் கணக்கில், தேறிய மூலதன உட்பாய்ச்சலானது 40 சதவீதத்தினால் குறைக்கப்பட்டமையால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட காலப் பகுதியில் சென்மதி நிலுவையின் செயலாற்றம் மேலும் மோசமடைதற்குக் காரணமாக அமைந்தது. இத்தகைய நிலைமைகளினால் திரண்ட பற்றுக் குறையானது 1988 ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியைவிட 1989இன் முதல் அரையாண்டுக் காலப்பகுதியில் கிட்டத்தட்ட நான்கு மடங்காக அதிகரித்து 320 இலட்சம் சிறப்பு எடுப்பனவு உரிமையிலிருந்து (ரூ. 29,180 இலட்சம்) 1,210 சிறப்பு எடுப்பனவு உரிமையாக (ரூ. 58,480 இலட்சம்) அதிகரித்தது. 1989 யூன் இறுதியில் நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 3,720 இலட்சம் சிறப்பு எடுப்பனவு உரிமையாகக் காணப்பட்டது. (ரூ. 160,020 இலட்சம்). இந்தத் தொகையானது 1989இன் இரண்டாம் அரையாண்டுக்கான திட்டமிடப்பட்ட இறக்குமதிகளில் 2.1 மாதத்துக்கு மட்டுமே நிதியிடப் போதுமானதாகக் காணப்பட்டது.

1989இன் முதலரைப்பகுதியில் இறை நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினையே பிரதிபலித்தன. வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கானது கடந்த ஆண்டின் நேரிணையான காலப்பகுதியில் காணப்பட்ட ரூ. 19,480 இலட்சம் மிகைக்கு மாறாக ரூ. 26,400 இலட்சம் பற்றுக்குறையைப் பதிவுசெய்தது. இதேவேளை திரண்ட வரவு செலவுத் திட்டப்பற்றுக்குறையானது (கொடைகளின் பின்) 1988இன் நேரிணையான காலப்பகுதியின் ரூ. 98,840 இலட்சங்களிலிருந்து ரூ. 126 740 இலட்சங்களாக அதிகரித்தது. வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறையின் விரிவானது அரசிறையினதும் கொடைகளினதும் 12 சதவீத அதிகரிப்புக்கு எதிராக செலவினம் 17 சதவீதத்தினால் அதிகரித்தமையின் விளைவாகும். பற்றுக்குறைக்கு நிதியிடுவதற்காக ரூ. 97,810 இலட்சம் கொண்ட மூல வளங்கள் உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்டன. இதில் ரூ. 87,560 இலட்சங்கள் வங்கியல்லா மூலங்களினாலும், ரூ. 10,270 இலட்சங்கள் வங்கி மூலங்களினாலும் வழங்கப்பட்டன. வெளிநின்ற அரச படுகடனானது 1988 திசெம்பர் இறுதியில் காணப்பட்ட ரூ. 2,241,830 இலட்சங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து 1989 யூன் இறுதியில் ரூ. 2,333,970 இலட்சங்களாகக் காணப்பட்டது.

1989இன் முதலரைப்பகுதியில் அவதானிக்கப்பட்ட பணநிரம்பல் அதிகரிப்பு வீதத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க தணிந்த தன்மையானது இக்காலப்பகுதியில் காணப்பட்ட மிகச் சாதகமான அபிவிருத்தியாகும். 1988இன் இறுதியில் 29 சதவீதமாகக் காணப்பட்ட குறுகிய பணநிரம்பலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(M1) ஆண்டுக்கான அதிகரிப்பு வீதமானது 1989 யூன் இறுதியில் 15 சதவீதமாக வீழ்ச்சியடைந்த வேளையில் விரிந்த பணநிரம்பலின் (M2) ஆண்டுக்கான அதிகரிப்பு வீதமானது இதேகாலப் பகுதியில் 16 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. வங்கித்தொழில் முறையின் வெளிநாட்டுச் சொத்துக்களில் (தேறிய) ஏற்பட்ட கூடியளவு வீழ்ச்சியும், உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கலில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க மிதமான தன்மையுமே 1989இன் முதலரைப்பகுதியில் பணநிரம்பல் அதிகரிப்பின் தணிந்த தன்மைக்கான முக்கிய ஏதுக்காரணிகளாகக் காணப்பட்டன.

1988 காலப்பகுதிமுழுவதிலும் உயர்வாகவே காணப்பட்ட பண வீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காகவேண்டி, 1989இன் முதலரைப் பகுதியில் இலங்கை மத்திய வங்கியானது கட்டுப்படுத்தும் நாணயக் கொள்கையினையே தொடர்ந்தும் செயற்படுத்தியது. முதலில் வலிமையான திறந்த சந்தைக் கொள்கையின் மூலம் பொருளாதாரத்தில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையை ஈர்த்துக்கொள்வதே இதன் முக்கிய நோக்கமாகக் காணப்பட்டது. திறைசேரி உண்டியல் சந்தையின் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதே இவ்வுபாயத்தின் கீழான பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் வர்த்தக வங்கிகளுக்கும், ஏனைய முதலீட்டாளர்களுக்கும் கிரமமான முதலீட்டுவழிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு வாராந்த ஏலவிற்பனைகள் தொடரப்பட்ட அதேவேளையில் சந்தை விசைகளாலேயே வட்டிவீதம் தீர்மானிக்கப்படவிடப்பட்டது. வீழ்ச்சியடையும் வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலைமை காரணமாக 1989 யூனில் மத்திய வங்கியானது மூன்று புதிய கொள்கை முறைகளை மேற்கொண்டு, கட்டுப்படுத்தும் நாணயக் கொள்கையினை மேலும் வலுப்படுத்தியது.

(அ) வங்கி வீதத்தில் மேல்நோக்கிய திருத்தம்.

(ஆ) தனியார்துறைக்கான வங்கிக் கொடுகடனின் பகுதியளவான உச்சவரம்பு.

(இ) அத்தியாவசியமற்ற இறக்குமதிகளுக்கான கொடுகடன் பத்திரங்களுக்கெதிரான 100 சதவீத வரையறைத் தேவை.

வெளித்துறை நிலைமைகள் சுருக்கமான நிதிக் கொள்கைகளை வேண்டிநின்றபோதிலும், தனது மீள்நிதியிடல் திட்டத்தின்மூலம் உற்பத்தித் துறைக்கு உதவி வழங்குவதை மத்திய வங்கி தொடர்ந்தும் செயற்படுத்தியது. இடருக்குள்ளான நிதிக் கூட்டுநிலையங்களுக்கு மீள்நிதியிடும் ஏற்பாடுகளும் 1989இன் முதலரைப்பகுதியில் தொடரப்பட்டன.

## 2. வேளாண்மை

முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 1989இன் முதலரைப்பகுதியில் வேளாண்மைத்துறையின் செயலாற்றம் பெரும்பாலும் ஏமாற்றமானதாகவே காணப்பட்டது. தெங்கு தவிர்ந்த ஏனைய எல்லாப் பயிரினங்களினதும் உற்பத்திகள் வீழ்ச்சியையே பதிவுசெய்தன. முதல் காலாண்டில் நாட்டில் நிலவிய வரட்சிநிலைமையே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. நாட்டில் அமைதியின்மை காரணமாக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின் வேகம் குறைக்கப்பட்டமை இத்துறையின் உற்பத்தி வீழ்ச்சிக்கான மேலதிக ஏதுக்காரணியாக அமைந்தது.

1988இன் நேரிணையான காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து 1989இன் முதலரைப்பகுதில் மரப்பயிர்களில் தேயிலையானது 20 சதவீத அதிவேக உற்பத்தி வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. இறப்பர் உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவான 11 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. மாருக, முன்னையஆண்டில் நிலவிய சதகமான காலநிலையினதும் அதிகரித்த வளமாக்கிப் பயன்பாட்டினதும் காலங்கடந்த தாக்கத்தினுலும் தெங்கு உற்பத்தியின் உயிரியல் வட்டத்தின் மீளல் காரணமாகவும் 1989இன் முதலரைப்பகுதியில் தெங்கு உற்பத்தி மீட்சி பெற்றது. வரட்சியினதும், அமைதியின்மையினதும் தாக்கமானது நெல் உற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியில் கடுமையாகக் காணப்பட்டதோடு 1988/89 பெரும்போகத்தின்போது உற்பத்தி 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தற்காலிக தரவுகளின்படி, மிளகாயையும் பெரிய வெங்காயத்தையும் தவிர்ந்த ஏனைய எல்லாவகையான சிறு பயிர்களினதும் உற்பத்தியானது முன்னைய பெரும் போகத்தினைவிட வீழ்ச்சி யடைந்தது. ஏற்றுமதித் தொகைகளின் அடிப்படையில் 1989இன் முதலரைப் பகுதியில் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் கலப்பான வாய்ப்புக்களையே அனுபவித் துள்ளன.

**(அ) தேயிலை**

1989இன் முதலரைப்பகுதியில் தேயிலை உற்பத்தியானது 990 இலட்சம் கிலோக்கிராம்களென தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளவானது 1983இலிருந்து பதிவுசெய்யப்பட்ட எந்த ஒரு ஆண்டினதும் முதலரைப்பகுதியை விட ஆகக்குறைவான உற்பத்தி அளவாகும். மூன்று உயரவகை நிலப்பிரதேச உற்பத்தியிலும் வீழ்ச்சி காணப்பட்டதோடு தாழ்நிலப் பிரதேச உற்பத்தியானது ஆகக்கூடுதலான வீழ்ச்சியான 27 சதவீதத்தைப் பதிவுசெய்து 379 இலட்சம் கிலோக்கிராம்களாகக் காணப்பட்டது. 1988இன் நேரிணையான காலப்பகுதி யுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து மத்திய நிலப்பிரதேசத்தினதும், உயர்நிலப் பிரதேசத்தினதும் உற்பத்தி 19 சதவீதத்தினாலும், 14 சதவீதத்தினாலும் வீழ்ச்சி யடைந்து முறையே 238 இலட்சம் கிலோக்கிராம்களாகவும், 373 இலட்சம் கிலோக்கிராம்களாகவும் காணப்பட்டது. உற்பத்தியின் வீழ்ச்சிக்கு 1989இன் முதற்காலாண்டில் நாட்டில் காணப்பட்ட வரட்சி நிலைமையும் இரண்டாம் காலாண்டில் காணப்பட்ட அமைதியின்மையும் ஏதுக் காரணிகளாக அமைந்தன. 1988இன் இறுதி மாதங்களில் தேயிலை பறித்தலில் தொடர்ந்து ஏற்பட்ட தடைகள் காரணமாக தேயிலைச்செடிகளில் மேலதிக வளர்ச்சி ஏற்பட்டமையால் பாதிக்கப்பட்ட தோட்டங்களில் செடிகளைத் கத்தரிக்கவேண்டி ஏற்பட்டமையும் 1989இன் முதலரைப்பகுதியில் தேயிலை உற்பத்தியின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தன.

1989இன் முதலரைப்பகுதியில் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளினதும், இலங்கை அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனங் களினதும் கூட்டான உற்பத்தி 667 இலட்சம் கிலோக்கிராம்களாகக் காணப் பட்டது. இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியின் உற்பத்தியைவிட 16 சதவீதம் குறைவானதாகும். மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திசபைகளின் உற்பத்தி வீழ்ச்சி ஏறத்தாழ 13 சதவீதமானதாகக் காணப்பட்டதுடன் உற்பத்தி 409 இலட்சம் கிலோக்கிராம்களிலிருந்து 354 இலட்சம் கிலோக் கிராம்களாகக் குறைந்திருந்தது. இதேவேளையில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் உற்பத்தியின் வீழ்ச்சி ஏறத்தாழ 18 சதவீதமாகக் காணப்பட்டதுடன் உற்பத்தி 382 இலட்சம் கிலோக்கிராம்களிலிருந்து 313 இலட்சம் கிலோக்கிராம்களாகக் குறைந்திருந்தது. எவ்வாறுயினும், தனியார் துறையினரின் சாதகமற்ற செயற்பாட்டின் காரணமாக, மொத்த உற்பத்தியில் இவற்றின் சார்பான பங்கானது 1988இன் முதலரைப்பகுதியில் 64 சதவீதத் திலிருந்து 1989இன் முதலரைப்பகுதியில் 67 சதவீதமாக அதிகரித்தது. தனியார்துறையின் உற்பத்தியானது முன்னைய ஆண்டின் நேரிணையான காலப் பகுதியைவிட 28 சதவீதத்துக்கு மேலாக அல்லது 127 இலட்சம் கிலோக்கிராம் களினால் வீழ்ச்சியடைந்தது.

முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியுடன் ஒப்பிட்டுப்பார்க்கு மிடத்து ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் மக்கள் தோட்ட அபி விருத்திச் சபைகளின் முகாமைக்கு உட்படுத்தப்பட்ட தோட்டங்களின் சராசரி விளைச்சல் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து எக்டேயர் ஒன்றுக்கு 1,269 கிலோக்கிராம்களாகக் காணப்பட்ட வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் சராசரி விளைச்சல் 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து எக்டேயர் ஒன்றுக்கு 1,111 கிலோக்கிராம்களாகக் காணப்பட்டது. 1989இன் முதலரைப்பகுதியில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளின் வளமாக்கிப் பாவனை 26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 20,821 மெற்றிக் தொன்களாகக் காணப்பட்ட வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் வளமாக்கிப் பாவனை 3 சதவீதத்தினால் குறைந்து 14,900 மெற்றிக் தொன் களாகக் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2.1

**தேயிலைத்துறையின் புள்ளிவிபரங்கள் 1986 — 1989**

| விடயம் | அலகு | 1986 | 1987 | 1988 (அ) | 1989 சன-யூன் (ஆ) |
|---|---|---|---|---|---|
| 1. உற்பத்தி .. .. .. | ப. இ. கி. கிறும்கள் | 211.3 | 213.3 | 226.9 | 99.0 |
| 1.1. உயர் நிலம் .. .. .. | ,, | 77.1 | 73.4 | 76.8 | 37.3 |
| 1.2. மத்திய நிலம் .. .. .. | ,, | 53.3 | 53.5 | 54.3 | 23.8 |
| 1.3. தாழ் நிலம் .. .. .. | ,, | 80.9 | 86.4 | 95.8 | 37.9 |
| 2. தேயிலை பயிரிடப்பட்ட பரப்பளவு .. .. | '000 எக்டேயர்கள் | 223 | 221 | 222 | 222 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் .. .. .. | '000 மெ. தொன்கள் | 128.8 | 136.7 | 138.0 | கி. கி. |
| 4. மீள் நடுகை .. .. .. | எக்டேயர்கள் | 1,618 | 1,503 | 1,592 | 786 |
| 5. விலைகள் | | | | | |
| 5.1. கொழும்பு தேறிய .. .. .. | ரூ. கி. கி. | 30.28 | 38.06 | 41.59 | 45.35 |
| 5.2. ஏற்றுமதி க. ஏ. பெ. .. .. .. | ,, | 44.52 | 52.97 | 55.95 | 58.40 |
| 6. ஏற்றுமதிகள் .. .. | ப. இ. கி. கி. | 207.8 | 201.1 | 219.8 | 90.3 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் .. .. .. | ரூ. ப. இ. (சிஎ.உ. ப. இ.) | 9,252.8 (281) | 10,653.5 (280) | 12,298.7 (288) | 5,274.0 (121) |
| 8. மொத்த. உ. உ.யின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி(இ) | | 4.5 | 5.5 | 5.1 | — |

குறிப்பு : எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சலின் தரவு கிடைக்கவில்லை.
(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை
(இ) பயிரிடலும், பதனிடலும் மட்டும்

மூலங்கள் : இலங்கைத் தேயிலைச்சபை,
தேசியவளமாக்கிச் செயலகம்,
தேயிலை சிறுஉடைமையாளர் மேலாண்மைச் சபை
மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபைகள்,
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
இலங்கை மத்திய வங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989இன் முதலரைப்பகுதியில் அரசதுறைத் தோட்டங்களில் மீள்நடப்பட்ட பரப்பானது 13 சதவீதத்தினால் அதிகரித்து 638 எக்டேயர்களாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் மீள்நடுகைச் செயற்பாடானது ஒரே சீராகக் காணப்படவில்லை. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகள் மீள்நடப்பட்ட பரப்பளவில் 50 சதவீத அதிகரிப்பினை அறிவித்த அதேவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினால் மீள் நடப்பட்ட பரப்பானது 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இரு அரச கூட்டுத்தாபனங்களினாலும் புதிதாக நடப்பட்ட கூட்டான பரப்பானது 37 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

கொழும்பு ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட தேயிலைகளின் சராசரி மொத்த விலையானது 1988இன் முதலரைப்பகுதியின், கிலோக்கிராம் ஒன்றுக்கு 44 ரூபாய் 36 சதத்திலிருந்து 1989இன் முதலரைப்பகுதியில் கிலோக்கிராம் ஒன்றுக்கு 46 ரூபாய் 71 சதமாக அதிகரித்தது.

1989 சனவரியில் உயர்நில, மத்திய நிலப்பிரதேசங்களுக்கான தேயிலை மீள்நடுகை உதவுதொகையானது எக்டேயர் ஒன்றுக்கு ரூ. 48,000ஆக அதிகரிக்கப்பட்டவேளையில் தாழ்நிலப் பிரதேசங்களுக்கான அதிகரிப்பு எக்டேயர் ஒன்றுக்கு ரூ. 41,000ஆகக் காணப்பட்டது. இத்துடன் தேயிலைக்கான புதியபயிரிடல் உதவுதொகையும் எக்டேயரொன்றுக்கு ரூ.30,000மாக அதிகரிக்கப்பட்டது.

தேயிலைக்கான பெறுமானவிகித விற்பனைவரி 1989 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து மீளாய்வு செய்யப்பட்டது. அதன்படி விற்பனவு வரிக்கான தொடக்கவிலையானது கிலோக்கிராம் ஒன்றுக்கு மாதத்துக்கு ரூ. 10 உச்ச வரிவிதிப்புடன் 44 ரூபாவிலிருந்து 48 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

(ஆ) இறப்பர்

1989இன் முதலரைப்பகுதியில் இறப்பர் உற்பத்தியானது 606 இலட்சம் கிலோக்கிராம்களென தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியின் உற்பத்தி அளவினைவிட 11 சதவீதம் குறைவானதாகும். உற்பத்தியளவின் வீழ்ச்சி அரசதுறை, தனியார்துறை இரண்டிலும் பிரதிபலித்தது. 1989இன் முதலரைப்பகுதியில், முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியுடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினதும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் கூட்டான உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவான 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததோடு தனியார்துறையின் உற்பத்தியானது 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் நாட்டில் காணப்பட்ட வரட்சி நிலைமையும், இரண்டாம் காலாண்டுப்பகுதியில் நாட்டின் முக்கிய இறப்பர் பயிரிடும் பிரதேசங்களில் ஏற்பட்ட கூடிய பருவப்பெயர்ச்சி மழையும், வெள்ளப்பெருக்குமே குறைந்த உற்பத்தி நடவடிக்கைகளுக்குக் காரணமாக அமைந்தன. இறப்பர் பயிரிடும் பிரதேசங்களில் நிலவிய அமைதியின்மையும் உற்பத்தி வீழ்ச்சிக்கு ஏதுக்காரணியாய் அமைந்திருக்கலாம்.

1989இன் முதலரைப்பகுதியில் சராசரி விளைச்சலானது 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து எக்டேயர் ஒன்றுக்கு 839 கிலோக்கிராம்களாகக் காணப்பட்டது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளுக்கும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களுக்கும் சொந்தமான தோட்டங்களில் ஒவ்வொன்றினதும் உற்பத்தியானது 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து முறையே எக்டேயர் ஒன்றுக்கு 783 கிலோக்கிராம்களாகவும், எக்டேயர் ஒன்றுக்கு 681 கிலோக்கிராம்களாகவும் காணப்பட்டது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளின் முகாமைக்குட்பட்ட தோட்டங்களில் வளமாக்கிப் பயன்பாடானது 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் முகாமைக்குட்பட்ட தோட்டங்களில் வளமாக்கிப் பயன்பாடு 1 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2.2.

இறப்பர்த்துறையின் புள்ளிவிபரங்கள் 1986 - 1989

| விடயம் | அலகு | 1986 | 1987 | 1988 (அ) | 1989 சன-யூன் (ஆ) |
|---|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ப. இ. கி. கி. | 137.8 | 121.5 | 122.4 | 60.6 |
| 2. பரப்பளவு | | | | | |
| 2.1. பயிர்ச் செய்கைக்குட்பட்ட | '000 எக்டேயர்கள் | 202.8 | 201.9 | 200.2 | 199.6 |
| 2.2. பால் எடுக்கும் | ,, | 149.9 | 147.5 | 145.5 | 144.4 |
| 3. விளைச்சல் | கி.கி. எக்டேயர்கள் | 919 | 824 | 841 | 839 |
| 4. வளமாக்கி வழங்கல்கள் | '000 மெ. தொன்கள் | 26.3 | 23.4 | 25.1 | வி.கி. |
| 5. மீள்நடுகை (இ) | எக்டேயர்கள் | 5,911 | 5,635 | 4,167 | 2,674 |
| 6. விலைகள் | | | | | |
| 6.1. ஏற்றுமதிகள் க. ஏ. பெ. | ரூ./கி.கி. | 23.83 | 27.63 | 37.33 | 35.36 |
| 6.2. கொழும்பு ஆர்எஸ்எஸ் 1 | ,, | 16.62 | 19.87 | 24.40 | 20.59 |
| 7. உற்பத்திச் செலவு (ஈ) | ,, | 13.70 | 13.95 | 15.55 | 14.41 |
| 8. ஏற்றுமதிகள் | ப. இ. கி.கி. | 110.0 | 106.0 | 99.3 | 50.2 |
| 9. உள்நாட்டு நுகர்வு | ,, | 16.4 | 19.4 | 19.9 | 10.6 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ. ப. இ.<br>(சிஎஉ. ப. இ.) | 2,622.0<br>(80) | 2,929.3<br>(77) | 3,705.9<br>(87) | 1,776.0<br>(41) |
| 11. மொ. உ. உ.யின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.4 | 1.4 | 1.7 | — |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.
(இ) அரசதுறைத் தோட்டங்கள் உட்பட.
(ஈ) தனியார்துறைத் தோட்டங்களின் உற்பத்திச் செலவின் கணிக்கப்பட்ட சராசரி.
(உ) பயிரிடலும், பதனிடலும் மட்டும்.

மூலங்கள் : இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை,
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
இலங்கை மத்திய வங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு ஏலங்களில் எல்லாவகையான தட்டை இறப்பரினதும் லேட்டெக்ஸ் கிரேப், கழிவு கிரேப் என்பனவற்றினதும் சராசரி விலைகள் வீழ்ச்சியையே பதிவுசெய்தன. இதற்கான முக்கிய காரணிகளாக அதிகரிக்கப்பட்ட உலக நிரம்பல்களும், சுறுசுறுப்பற்ற கேள்வியும் காணப்பட்டன. முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியுடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து 1989இன் முதலரைப்பகுதியில் தனியார்துறையின் உற்பத்திச் செலவானது 6 சதவீதத்தினால் அதிகரித்து கிலோக்கிறாம் ஒன்றுக்கு 14 ரூபாய் 41 சதமாகக் காணப்பட்டது. இதேவேளையில் 1989இன் முதலரைப்பகுதியில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினதும் உற்பத்திச் செலவு (தோட்ட மட்டத்தில்) முறையே 24 சதவீதத்தினாலும், 23 சதவீதத்தினாலும் அதிகரித்து முறையே கிலோக்கிறாம் ஒன்றுக்கு 29ரூபா 28 சதமாகவும், கிலோகிறாம் ஒன்றுக்கு 29ரூபாய் 56 சதமாகவும் காணப்பட்டது. இதற்கான காரணம் குறைந்த விளைச்சலும், அதிகரித்த கூலிச் செலவுமாகும்.

1988இன் நேரிணையான காலப்பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து 1989இன் முதலரைப்பகுதியில் தனியார்துறையினரால் மீள்நடப்பட்ட பரப்பானது மூன்று மடங்கான அதிகரிப்பினைப் பதிவுசெய்து 1,497 எக்டேயர்களாகக் காணப்பட்டது. மாறாக, மீள்நடப்பட்ட பரப்பில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களும் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியையே பதிவுசெய்தன. அதாவது மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பரப்பானது 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 650 எக்டேயர்களாகவும், இலங்கை அரசபெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் பரப்பானது 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 547 எக்டேயர்களாகவும் காணப்பட்டன. 1989 இன் முதலரைப் பகுதியில் தனியார்துறையின் புதிய நடுகை 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினதும் புதிய நடுகைப்பரப்பு முறையே 8 சதவீதத்தினாலும், 19 சதவீதத்தினாலும் அதிகரித்தது. பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு ஊக்கமூட்டும் வகையிலான மீள்நடுகைக்கும் புதிய நடுகைக்குமான உதவுதொகை கொடுப்பனவுகள் 1989 சனவரியிலிருந்து செயற்படும் வகையில் திருத்தியமைக்கப்பட்டன. மீள்நடுகைக்கானஉதவு தொகையானது எக்டேயர் ஒன்றுக்கு 24,710 ரூபாவிலிருந்து எக்டேயர் ஒன்றுக்கு 32,100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. புதிய நடுகைக்கான உதவு தொகையானது எக்டேயர் ஒன்றுக்கு 22,850 ரூபாவிலிருந்து 30,250 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

### (இ) தெங்கு

கடந்த ஆண்டின் நேரிணையான காலப்பகுதியில் அதிகளவு வீழ்ச்சியடைந்து காணப்பட்ட உற்பத்தியினைவிட 1989இன் முதலரைப்பகுதியில் தெங்கு உற்பத்தி 34 சதவீதத்தினால் அதிகரித்து 12,150 இலட்சம் காய்களாகக் காணப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்களவிலான இம்மீட்சிக்குக் காரணம் முன்னைய ஆண்டில் நாட்டில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளும், அதிகளவிலான வளமாக்கிப் பயன்பாட்டின் காலங்கடந்த தாக்கமுமேயாகும்.

முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியுடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து 1989இன் முதலரைப்பகுதியில் உலர்த்திய தேங்காய் துருவல் உற்பத்தி நான்கு மடங்கிற்கு மேலாக அதிகரித்து அண்ணளவாக 1,560 இலட்சம் தேங்காய்களுக்குச் சமமானதாகக் காணப்பட்டவேளையில் தேங்காய் எண்ணெய் உற்பத்தியானது இருமடங்கிற்கு மேலாக அதிகரித்து 3,025 இலட்சம் காய்களுக்குச் சமமாகக்காணப்பட்டது. 1989இன் முதலரைப்பகுதியில் தேங்காயின் ஏற்றுமதித் தொகுதியானது சிறிதளவில் அதிகரித்ததோடு உலர்த்திய தேங்காயின் ஏற்றுமதித் தொகை 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2.3.

தெங்குத்துறையின் புள்ளிவிபரங்கள் 1986 - 1989

| விடயம் | அலகு | 1986 | 1987 | 1988 | 1989 சன-யூன் (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (ஆ) | ப. இ. காய்கள் | 3,039 | 2,292 | 1,936 | 1,215 |
| 1.1. உலர்த்திய தேங்காய்த் துருவல் | ப. இ. காய்கள் (இ) | 428 | 350 | 155 | 156 |
| 1.2. தேங்காய் எண்ணெய் | ப. இ. காய்கள் (இ) | 1,146 | 573 | 276 | 303 |
| 1.3. உலர்த்திய தேங்காய் (ஈ) | ப. இ. காய்கள் (இ) | 48 | 44 | 29 | 12 |
| 1.4. உடன்காய் ஏற்றுமதிகள் | ப. இ. காய்கள் | 18 | 16 | 12 | 6 |
| 1.5. உள்நாட்டுத் தேங்காய் நுகர்வு (உ) | ப. இ. காய்கள் | 1,451 | 1,368 | 1,449 | 738 |
| 2. சராசரி ஏற்றுமதி விலை (க. ஏ. பெ.) | காய்க்கு ரூபா | 1.46 | 2.64 | 4.00 | 3.30 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் | '000 மெ. தொன்கள் | 31.6 | 42.2 | 342.0 | கி.இ. |
| 4. உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 0.60 | 0.99 | 0.81 | 0.81 |
| 5. மீள்நடுகை/கீழ்நடுகை (ஊ) | எக்டேயர்கள் | 4,206 | 2,922 | 2,049 | 728 |
| 6. புதிய நடுகை (ஊ) | எக்டேயர்கள் | 1,465 | 1,858 | 1,153 | 607 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ. ப. இ. (சிஎஉ. ப. இ.) | 2,389 (73) | 2,140 (56) | 1,539 (36) | 1,117 (26) |
| 7.1. உள்வீட்டு உற்பத்திகள் | ரூ. ப. இ. (சிஎஉ. ப. இ.) | 1,609 (49) | 1,423 (37) | 896 (21) | 702 (16) |
| 7.2. ஏனைய உற்பத்திகள் | ரூ. ப. இ. (சிஎஉ. ப. இ.) | 780 (24) | 717 (19) | 643 (15) | 415 (10) |
| 8. மொ. உ. உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (எ) | | 2.6 | 2.6 | 2.7 | — |

மூலங்கள் : தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை,
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
தேசிய வளமாக்கிச் சபை
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காய் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்குச் சீராக்கஞ் செய்யப்படுவதனால் பகுப்பாய்வு மொத்த உற்பத்தியுடன் கூட்டப்படுவதில்லை).

(இ) தேங்காய்க்குச் சமனான ஒரு — மெற். தொன் உலர்த்தியதேங்காய்த் துருவல் — 6,800 காய்கள்
— மெற். தொன் எண்ணெய் — 8,000 காய்கள்
— மெற். தொன் உலர்த்திய தேங்காய் — 4,925 காய்கள்

(ஈ) ஏற்றுமதி மட்டும்
(உ) தலைக்குரிய நுகர்வு 90 காய்கள் என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. கைத்தொழில் பாவனை தவிர்ந்த.
(ஊ) விபரமான தரவுகள் கிடைக்காமையின் காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடமைகளில் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.
(எ) பயிரிடலும், பதனிடலும் மட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2.4.

நெற்றுறையின் புள்ளிவிபரங்கள் - பயிர்ச்செய்கை ஆண்டுகள் 1986 - 1989

| விடயம் | அலகு | 1986 | 1987 | 1988 | 1988/89 (அ) பெரும் போகம் |
|---|---|---|---|---|---|
| விதைக்கப்பட்ட மொத்தப்பரப்பளவு | '000 எக்டேயர்கள் | 895 | 781 | 668 | 482 |
| வளமாக்கி வழங்கல்கள் | '000 மெ. தொன்கள் | 197 | 151 | 204 | 105 |
| வழங்கப்பட்ட கொடுகடன் .. .. | ரு. ப. இ. | 190 | 262 | 237 | வி. இ. |
| அறுவடை செய்யப்பட்ட மொத்தப்பரப்பளவு .. | '000 எக்டேயர்கள் | 835 | 679 | 816 | 458 |
| எக்டேயருக்கான சராசரி விளைச்சல் .. .. | கி.கி. | 3,500 | 3,564 | 3,413 | 3,449 |
| உற்பத்தி .. .. | '000 மெ. தொன்கள் | 2,588 | 2,128 | 2,477 | 1,390 |
| உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழான கொள்வனவுகள் (ஆ) | '000 மெ. தொன்கள் | 154 | 64 | 105 | 05 |
| இறக்குமதிகள் (நெல்லிற்குச்சமன்) (ஆ) .. .. | '000 மெ. தொன்கள் | 314 | 146 | 277 | 178 |

குறிப்பு : பயிர்ச்செய்கையாண்டு பெரும் போகத்தையும் (செத்தெம்பர்/ஒற்ரோபர் — - மாச்சு/ஏப்பிறல்) சிறுபோகத்தையும், (ஏப்பிறல்/மே - ஓகத்து/செத்தெம்பர்) உள்ளடக்கும்.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) கலண்டர் ஆண்டின் அடிப்படையில்.

மூலங்கள் : வேளாண்மை, உணவு கூட்டுறவுத்துறை அமைச்சு,
நெல் சந்தைப்படுத்தும் சபை,
குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிகத் தரவுகளின்படி 1989இன் முதலரைப்பகுதியில் தெங்கின் மீள்நடுகையினதும்/கீழ் நடுகையினதும் பரப்பானது குறிப்பிடத்தக்களவான 27 சதவீதத்தினுல் 728 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. மாறுக புதிய நடுகையின் பரப்பானது 47 சதவீதத்தினுல் 607 எக்டேயர்களுக்கு அதிகரித்தது.

(ஈ) நெல்

1988 / 89 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி 14 இலட்சம் மெற்றிக் தொன்கள் என (ஏறத்தாழ 660 இலட்சம் புசல்கள் அல்லது 9.5 இலட்சம் மெற்றிக் தொன் அரிசிக்குச் சமன்) மதிப்பிடப்பட்டுள்ளதோடு இந்த மதிப்பீடானது முன்னைய ஆண்டின் பெரும்போகத்தின் உற்பத்தியைவிட 9 சதவீதத்தினுல் குறைந்தும் இருந்தது. உற்பத்தியின் இந்த வீழ்ச்சிக்கான மூலகாரணம் பயிர் செய்யப்பட்ட, அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு குறைந்தமையே யாகும். மேலும் முக்கிய நெல் உற்பத்திப் பிரதேசங்களில் காணப்பட்ட வரட்சி நிலைமைகளும், வளமாக்கிப் பயன்பாட்டில் காணப்பட்ட வீழ்ச்சியும் உற்பத்தி வீழ்ச்சிக்குக் காரணமாயின. நாட்டில் காணப்பட்ட அமைதியின்மையும் குளங்களிலிருந்து நீர் விநியோகம் செய்வதில் காணப்பட்ட தாமதமும் வரண்ட வலயப் பிரதேசங்களின் உற்பத்தியினை மோசமாகப் பாதித்துள்ளது முன்னைய ஆண்டின் பெரும்போகத்துடன் ஒப்பிடும்போது 1988 / 89 பெரும்போகத்தில் பயிர்செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 12 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. பாரிய, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் பயிர்செய்யப்பட்ட மொத்தப்பரப்பும் குறிப்பிடத்தக்களவான 13 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்த வேளையில் மழை நீரின் உதவியுடன் பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பும் 8 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. 1988 / 89 பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு 9 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்து 402,783 எக்டேயர்களாக விளங்கியது.

1988/89 பெரும்போகத்தின்போது வளமாக்கிப் பயன்பாடானது குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியான 22 சதவீதத்தினுல் 104,954 மெற்றிக்தொன்களுக்குக் குறைந்தது. இதனுல், விதைக்கப்பட்ட ஒவ்வொரு எக்டேயருக்கும் வளமாக்கிப் பயன்பாட்டில் 11 சதவீதவீழ்ச்சி காணப்பட்டது. எவ்வாறுயினும் எக்டேயருக்கான சராசரி விளைச்சலானது 8 கிலோக்கிரும்களிலான சிறிதளவு அதிகரிப்புக் காரணமாக 3,449 கிலோக்கிரும்களுக்கு உயர்ந்தது.

1989இன் முதலரைப்பகுதியில் நெல்லுக்கான உத்தரவாதவிலை புசல் ஒன்றுக்கு ரூ. 80/-ஆக மாறுது காணப்பட்டது. உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெல்சந்தைப்படுத்தும் சபையினுல் 1989 இன் முதலரைப்பகுதியில் கொள்வனவு செய்யப் பட்ட நெல்லின் தொகை 4,687 மெற்றிக் தொன்களாக மட்டுமே காணப்பட்டதோடு முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட 101,950 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடும்போது மிகக்குறிப்பிடத்தக்க அளவான 95 சதவீத வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. குறைந்த உற்பத்தி, திறந்த சந்தையில் கூடுதலான விலைகள், மேலும் அமைதியின்மை என்பனவற்றினுல் நெல் சந்தைப்படுத்தும் சபையின் நடவடிக்கைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டமையே நெல் சந்தைப்படுத்தும் சபையினுல் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் கொள்வனவுகளில் காணப்பட்ட அதிகளவு வீழ்ச்சிக்குக் காரணங்களாகும்.

(உ) சிறு உணவுப் பயிர்கள்

முன்னைய ஆண்டின் உற்பத்திச் செயற்பாட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து, தற்காலிகத் தரவுகளின்படி 1988/89 பெரும்போகத்தில் சிறு உணவுப் பயிர்களின் உற்பத்திச் செயற்பாடானது ஓரளவு குறைவானதாகவே காணப்பட்டது. 1988/89 பெரும்போகத்தில் மிளகாயையும், பெரிய வெங்காயத்தையும் தவிர்ந்த பெரும்பாலான சிறு உணவுப் பயிர்களினதும் உற்பத்தியில் வீழ்ச்சியே பதிவுசெய்யப்பட்டது. சிறு உணவுப் பயிர்களின் குறிப்பிடத்தக்க உற்பத்தி வீழ்ச்சிக்கு நாட்டில் நிலவிய சாதகமற்ற வானிலைத் தன்மை காரணமாக பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டுவரப்பட்ட நிலப்பரப்பு குறுகியமை, தொடர்ச்சியாகக் காணப்பட்ட அமைதியின்மை, குறைவான சராசரி விளைச்சல் ஆகியன பிரதான ஏதுக் காரணிகளாகத் தென்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2.5.

வேளாண்மைத்துறையின் ஒப்பீட்டுச் செயலாற்றம் - முதலரைப்பகுதி 1988 - 1989

| பயிர் | அலகு | 1988 சன-யூன் | 1989 * சன-யூன் |
|---|---|---|---|
| 1. தேயிலை | | | |
| 1.1. உற்பத்தி .. | ப. இ. கி. கி. | 124.0 | 99.0 |
| 1.2. சராசரி விலை | | | |
| கொழும்பு .. | ரூபா/கி. கி. | 42.69 | 45.35 |
| ஏற்றுமதி க. ஏ. பெ. .. | ,, | 56.50 | 58.40 |
| 1.3. வளமாக்கி வழங்கல்கள் .. | '000 மெ. தொன்கள் | 79.2 | கி. கி. |
| 2. இறப்பர் | | | |
| 2.1. உற்பத்தி .. | ப. இ. கி. கி. | 67.8 | 60.6 |
| 2.2. சராசரி விலை | | | |
| கொழும்பு ஆர். எஸ். எஸ். 1 | ரூபா/கி. கி. | 24.40 | 20.59 |
| ஏற்றுமதி க. ஏ. பெ. .. | ,, | 34.08 | 35.36 |
| 2.3. மீளப்பயிரிடல்(இ) .. | எக்டேயர்கள் | 1,884 | 2,674 |
| 2.4. வளமாக்கி வழங்கல்கள் .. | '000 மெ. தொன்கள் | 15.8 | கி. கி. |
| 3. தெங்கு | | | |
| 3.1. உற்பத்தி .. | ப. இ. காய்கள் | 906 | 1,215 |
| 3.2. சராசரி ஏற்றுமதி விலை .. | ரூபா/காய் | 3.57 | 3.30 |
| 3.3. வளமாக்கி வழங்கல்கள் .. | '000 மெ. தொன்கள் | 21.2 | கி. கி. |
| 4. நெல் (அ) | | | |
| 4.1. உற்பத்தி .. | '000 மெ. தொன்கள் | 1,525 | 1,390 |
| 4.2. பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு .. | '000 எக்டேயர் | 545 | 482 |
| 4.3. எக்டேயருக்கான விளைச்சல் .. | கி. கி. | 3,440 | 3,449 |
| 4.4. அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு .. | '000 எக்டேயர் | 443 | 403 |
| 4.5. உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழான கொள்வனவுகள் | '000 மெ. தொன்கள் | 92 | 05 |
| 4.6. அரிசி இறக்குமதிகள் (ஆ) .. | ,, | 148 | 121 |
| 4.7. வளமாக்கி வழங்கல்கள் .. | ,, | 134 | 105 |

*தற்காலிகமானவை
(அ) பெரும்போகம் மட்டும்.
(ஆ) கலண்டர் மாத அடிப்படையில்.
(இ) அரச துறைத்தோட்டங்கள் உள்ளடங்கும்.

மூலங்கள் : இலங்கைத் தேயிலைச் சபை,
இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
வேளாண்மை, உணவு, கூட்டுறவு அமைச்சு,
நெல் சந்தைப் படுத்தும் சபை.
உணவு ஆணையாளர் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக மகாவலிப் பிரதேசங்களில் கூடுதலான நிலப்பரப்பு பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டுவரப்பட்டமையாலும், சிறந்த விலைகள் காணப்பட்டமையாலும் 1988/89 பெரும்போகத்தில் மிளகாய் உற்பத்தியானது குறிப்பிடத்தக்க அளவான 32 சதவீதத்தினால் அதிகரித்தது. பெரிய வெங்காயத்தினதும், நிலக்கடலையினதும் உற்பத்தியளவில் சிறிதளவு அதிகரிப்பு பதிவுசெய்யப்பட்டது.

(ஊ) சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

ஏற்றுமதித் தரவுகளின் அடிப்படையில், 1989இன் முதலரைப்பகுதியில் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் செயற்பாடுகள் கலப்பானதாகவே தென்படுகின்றன. கறுவா, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலக்காய் என்பனவற்றின் ஏற்றுமதித் தொகையானது 1989இன் முதலரைப்பகுதியில் அதிகரிப்பினைப் பதிவுசெய்ததோடு உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவான அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. எவ்வாறாயினும் ஏற்றுமதிச் செயற்பாட்டின்படி மிளகு, கராம்பு என்பனவற்றின் உற்பத்தியானது குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தென்படுகின்றது.

(எ) விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டம்*

1989இன் முதலரைப்பகுதியில், விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாக வேளாண்மை உற்பத்தியை விரிவுபடுத்தல், கீழ் நீரோட்ட அபிவிருத்தி, தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி குடும்ப வருவாய்களை அதிகரித்தல் என்பன காணப்பட்டன. 1989இல் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூலதனச் செலவினங்களுக்கான மொத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்குகள் ரூ 33,200 இலட்சங்களாகக் காணப்பட்டன. இதில் ரூ. 14,350 இலட்சங்கள் அல்லது 43 சதவீதமான தொகை 1989இன் முதலரைப்பகுதியில் செலவிடப்பட்டது. இதில் பெரிய பாகமொன்று (71 சதவீதம்) முறைகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. முறை 'சி' (ரூ. 7,410 இலட்சம்), முறை 'பீ' (ரூ. 2,260 இலட்சம்), முறை 'ஜீ' (ரூ. 160 இலட்சம்), முறை 'எல்' (ரூ. 350 இலட்சம்). 1989இன் முதலரைப்பகுதியில் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின கீழ் உருவாக்கப்பட்ட வலு 767 கிகாவாட் மணித்தியாலங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

குடி மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின்படி 1988/89 பெரும்போகத்தின் போது முறை 'எச்' இல் 17,360 எக்டேயர்களில் நெற்செய்கை மேற்கொள்ளப் பட்டதோடு 2,333 எக்டேயர்களில் ஏனைய களப்பயிர்களின் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. 1989 இன் முதலரைப்பகுதியில் முறை 'சி' இல் 318 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டதோடு 1989 யூன் இறுதியில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் மொத்தத் தொகை 15,139ஆக உயர்ந்தது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் முறை 'சி' இல் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களினால் 162 வீடுகள் கட்டப்பட்டன. 1989இன் முதலரைப்பகுதியில் முறை 'பீ' இல் 61 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. 1989 யூன் இறுதியில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 11,465ஆக உயர்ந்ததோடு இது குடியமர்வுக்கான இலக்கின் கிட்டத்தட்ட 55 சதவீதத்தினைப் பூர்த்திசெய்திருந்தது. 1989இன் முதலரைப்பகுதியில் கிட்டத்தட்ட 83 வீடுகளும் கட்டப்பட்டன.

1989இன் முதலரைப்பகுதியில் முறை 'ஜீ' இல் அத்தனகடவல, பகமுன போன்ற பிரதேசங்களில் 12 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டதோடு, 1989 யூன் இறுதியில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் மொத்தத் தொகை 3,620ஆகக் காணப்பட்டது. 1989இன் முதலரைப்பகுதியில், குடியமர்த்தப்பட்டவர்களால் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 87 ஆகும்.

1989இன் முதலரைப்பகுதியில் ரன்தம்பே திட்டத்தின் அணையிலிருந்து தண்ணீர் வழிந்தோடும் வடிகால் தொகுதிகளினதும், அணைக்கட்டினதும் கட்டுமான வேலைகள் முன்னேறிக்கொண்டிருந்தன.

---

* இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கைத்தொழில்

1989இன் முதலரைப்பகுதியில் கைத்தொழில்துறையின் உண்மை நியதிகளிலான உற்பத்தியளவு 2 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. இது தனியார் துறைக் கைத்தொழில் முயற்சிகளில் காணப்பட்ட 9 சதவீத அதிகரிப்பினதும், அரசதுறை கைத்தொழில் முயற்சிகளில் காணப்பட்ட 18 சதவீத வீழ்ச்சியினதும் கூட்டான விளைவாகும். பொதுவான கைத்தொழில் உற்பத்தியின் வீழ்ச்சியானது இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்குப் பொருட்கள் போன்றவகைகளில் பிரதிபலித்தது. நாட்டில் அமைதியின்மை காரணமாக தொழிலாளர்கள் பணிக்குச் செல்லாமையும் அதனுல் உற்பத்தியில் ஏற்பட்ட சீர்குலைவும் 1989இன் முதலரைப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தின. மேலும், பேணல் நோக்கங்களுக்காக ஆண்டின் ஆரம்பத்தில் பெற்றோலிய தூய்மி மூடப்பட்டமையும் பொதுவான கைத்தொழில் உற்பத்தியில் முக்கிய தாக்கத்தினை ஏற்படுத்தியது.

(அ) அரசதுறைக் கைத்தொழில்

உண்மை நியதிகளில் 1989இன் முன்னரைப்பகுதியில் அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீடு, முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியில் காணப்பட்ட 9 சதவீத அதிகரிப்பிற்கெதிராக 18 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் ஏற்பட்ட மிகக்கூடியளவு வீழ்ச்சிக்கு, மொத்த அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் ஏறத்தாள 70 சதவீதத்திற்கு இணைந்து வகைகூறும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும், தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தினதும் உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியே காரணமாகும். பெற்றோலியம் தவிர்க்கப்படுமிடத்து, அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி 11 சதவீதமாக இருந்தது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 1989இன் முதற்காலாண்டில் பேணல் நோக்கங்களுக்காக தூய்மி 5 கிழமைகளுக்கு மூடப்பட்டிருந்தமையே முக்கிய காரணமாக இருந்தது. உண்மை நியதிகளில் அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளில் 22 சதவீதத்திற்கு வகைகூறும் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி வகையினது வெளியீடு 16 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த வேலைநேரம், வேலைக்கு வராமை என்பனவற்றின் விளைவாக ஏற்பட்ட தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தின் குறைவடைந்த வெளியீடே முக்கிய காரணமாகும்.

மர, மர உற்பத்திகள் வகையினது வெளியீடு 21 சதவீத வீழ்ச்சியினைப் பதிவுசெய்தமைக்கு மரம் தறிக்கும் தொழில் குறைவுற்றமையின் விளைவாக அரச மரக்கூட்டுத்தாபனத்தினதும், இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தினதும் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய இரண்டினதும் தாழ்ந்த உற்பத்தி மட்டங்களே தேசிய தாள் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு (20 சதவீதம்) வீழ்ச்சியடைந்தமைக்கு பொறுப்பாக இருந்தன.

1989இன் முன்னரைப்பகுதியில் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகளின் வெளியீடு 7 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தமைக்கு இலங்கைச் சீமெந்து மற்றும் இலங்கைக் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனங்களின் சிறந்த செயலாற்றமே முதன்மைக் காரணமாகும். உணவு, குடிபானம், மற்றும் புகையிலைவகை வெளியீட்டில் 2 சதவீத வளர்ச்சி பதிவு செய்யப்பட்டமைக்கு இலங்கைச் சீனி மற்றும் இலங்கை உப்புக் கூட்டுத்தாபனங்களினது அதிகரித்த உற்பத்தியே முக்கிய காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3.1

அரசதுறை முதன்மைக் கைத்தொழில் வெளியீட்டுச் சுட்டெண்

(1977 சனவரி - யூன் = 100)

| வகை | சனவரி - யூன் | |
|---|---|---|
| | 1988 | 1989 (அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 31.64 | 31.55 |
| 2. புடவை, அணியும்ஆடைகள், தோல் உற்பத்திகள் | 237.25 | 199.71 |
| 3. மர, மர உற்பத்திகள் | 78.98 | 81.57 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 173.14 | 139.15 |
| 5. இரசாயன உற்பத்திகள் | 135.59 | 101.59 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 155.43 | 181.93 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 98.90 | 83.19 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 63.06 | 41.93 |
| எல்லா வகைகளும் | 130.03 | 107.15 |

(அ) தற்காலிகமானவை. மூலம் : இலங்கை மத்திய வங்கி.

## (ஆ) தனியார்துறைக் கைத்தொழில்

பகுதியான அளவையொன்றின் தொடக்கப் பெறுபேறுகளின்படி 1989இன் முன்னரைப்பகுதியில், உண்மை நியதிகளில் தனியார்துறைக் கைத்தொழில்களின் வெளியீடு முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 9 சதவீதத்தினல் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வதிகரிப்பு முக்கியமாக புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் (12 சதவீதம்) இரசாயன உற்பத்திகள் (20 சதவீதம்) உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (15 சதவீதம்) ஆகியதுறைகளிலிருந்து கிடைத்தது. தாள், தாள் பொருட்கள் உற்பத்திகள் (10 சதவீதம்) உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள்(5 சதவீதம்) உணவு, குடிபானம், புகையிலை (2 சதவீதம்) என்பனவற்றிலும் அதிகரிப்புகள் பதிவு செய்யப்பட்டன.

## (இ) முதலீடு

கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு 1989இன் முதலரைப்பகுதியில் 11 செயற்திட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன், 1989 யூன் இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 295இனை அடைந்தது. 1989இன் முன்னரைப்பகுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் 4 கூட்டு முயற்சிகளாகவும், 7 முற்றிலும் வெளிநாட்டவர்களுக்குச் சொந்தமானதாகவும் விளங்கின. 1989 யூன் இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட 295 செயற்திட்டங்களில் 170 தொழில் முயற்சிகள் பல்வேறு கைத்தொழில்களைத் தொடங்குவதற்காக கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவுடன் ஏற்கனவே உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. 1989 யூன் இறுதியில் இச்செயற்றிட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீடு ரூ. 94,250 இலட்சமாக விளங்கியது. இதில் வெளிநாட்டுக்கூறு ரூ. 69,420 இலட்சமாகக் காணப்பட்டது. 1989 யூன இறுதியில் மொத்தமாக 70 தொழில் முயற்சிகள் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயத்திற்குள்ளேயும், 17 பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு உள்ளேயும் வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டிருந்த வேளையில் 22 தொழில் முயற்சிகள் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு வெளியே வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. 1989 சனவரி/மாச்சுக் காலப்பகுதியில் இம்முயற்சிகளிலிருந்தான மொத்த ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதிக்குரிய ரூ. 23,040 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 27,220 இலட்சமாக விளங்கியது. 1989 யூன் இறுதியில் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் முயற்சிகளில் தொழிலமர்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 57,150ஆக விளங்கியது.

1989இன் முன்னரைப்பகுதியில் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு தயாரிப்புத்துறையிலுள்ள 25 செயற்றிட்டங்கள் உட்பட 41 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச்செயற்றிட்டங்கள் ஏறத்தாள 3,524 பேருக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1989இன் முன்னரைப்பகுதியில் தயாரிப்புக் கைத்தொழில்களில் இடப்பட்ட மொத்த மூலதனம் ரூ. 7,370 இலட்சமாகும். இதில் வெளிநாட்டுக்கூறு ரூ. 3,200 இலட்சமாகும்.

1989இன் முன்னரைப்பகுதியில் உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழு 215 கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன் இதில் பெரும்பான்மையானவை மரம், தாள் மற்றும் மரக் கூழ் உற்பத்திகள், ஆடைகள், பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய இரசாயனங்கள், இரும்பும், இரும்பு அல்லாத உலோகக் கைத்தொழில் என்பனவற்றில் காணப்பட்டன. ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் உள்ளார்ந்த முதலீடு ரூ. 4,680 இலட்சமாகக் காணப்பட்டது. இவை 10,460 பேருக்கு தொழில் வாய்ப்பினை வழங்குமென எதிர்பார்க்கப்பட்டது.

(ஈ) கைத்தொழில் கொள்கை

கைத்தொழில் அமைச்சு தயாரிப்புத்துறையில் முதலீடுகளை உருவாக்கும் நோக்குடன் உத்திகளைக் கொண்ட ஆவணமொன்றினைத் தயாரிப்பதனைத் தொடங்கியுள்ளது. இது கைத்தொழில்துறையிலுள்ள பின்வரும் விடயங்களை பரிசீலிப்பதனையும் உள்ளடக்குகிறது. (அ) கைத்தொழில் நிதி (ஆ) உள்ளார்ந்த அமைப்பு (இ) மனிதவலுவும் பயிற்சியும் (ஈ) சந்தைப்படுத்தலும் ஏற்றுமதி ஊக்குவிப்பும் (உ) கைத்தொழில் மீள்அமைப்பு (ஊ) பயன்தரு பாதுகாப்பு.

அரசினால் பொறுப்பேற்கப்பட்ட யுனைட்டட் மோட்டர்ஸ் அரசின் தனியார் மயமாக்கும் கொள்கையைப் பேணும் விதத்தில் 1989 மே 6ஆம் நாளன்று வரையறுக்கப்பட்ட பொதுக் கூட்டு நிலையமாக மாற்றப்பட்டது. இக்கூட்டு நிலையத்தின் ரூ. 700 இலட்சம் பெறுமதி வாய்ந்த பங்குகள் ஏற்கனவே உதவு தொகைக்காகப் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தயாரிப்புத்துறைக்கு பொறிகளையும், பொறித்தொகுதிகளையும் இறக்குமதி செய்வதன் மீதிருந்த கட்டுப்பாடுகள், கைத்தொழில் உற்பத்தியை விரிவாக்கும் நோக்குடன் 1989 சனவரியில் அகற்றப்பட்டன. நாட்டில் கனிப்பொருள் மூலவளங்களை வர்த்தகமயமாக்கும் விடயத்தை ஆராய்வதற்காக அரசதுறை, தனியார்துறை இரண்டினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3.2.

**1989இன் முதல் அரைப்பகுதியில் கைத்தொழில் வகைகளின் வளர்ச்சி வீதம்**

(சக வீதம்)

| வகை | அரசதுறை வளர்ச்சி | தனியார் துறை வளர்ச்சி | முழுமையான வளர்ச்சி |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | + 2 | + 2 | + 2 |
| 2. புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | — 16 | + 12 | + 8 |
| 3. மர, மர உற்பத்திகள் | — 21 | + 5 | — 9 |
| 4. தாள், தாள் பொருட்கள் உற்பத்திகள் | — 20 | + 10 | — 8 |
| 5. இரசாயன, பெற்றோலிய, நிலக்கரி, இறப்பர், பிளாத்திக் வார்ப்புப் பொருள் உற்பத்திகள் | — 25 | + 20 | — 16 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியம், நிலக்கரி தவிர்ந்த) | + 7 | + 5 | + 6 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | + 17 | — | + 17 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் போக்குவரத்துக் கருவிகள் | — 27 | + 15 | + 13 |
| 9. வேறெங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | — | + 2 | + 2 |
| எல்லா வகைகள் | — 18 | + 9 | — 2 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

பெற்றோலியம் நீங்கலான வளர்ச்சி வீதம் (%)

| | | |
|---|---|---|
| அரசதுறை | — | 11 |
| தனியார்துறை | + | 9 |
| முழுமையானது | + | 3 |

## (உ) சுற்றுலா

1983ஆம் ஆண்டிலிருந்து இடர்ப்பாடுகளை அனுபவித்துவரும் சுற்றுலாக் கைத்தொழில் தொடர்ந்து 1989இன் முன்னரைப்பகுதியிலும் மிகத்தாழ்ந்த மட்டத்திலேயே தொழிற்பட வேண்டியிருந்தது. இக்காலப்பகுதியில் சுற்றுலா வருவோரின் எண்ணிக்கை 78,030ஆக விளங்கி கடந்த ஆண்டின் நேரிணையான காலப் பகுதியினைவிட 18 சதவீத வீழ்ச்சியினை எடுத்துக்காட்டியது. ஆங்காங்கே கநிலவிய உள்நாட்டுக் குழப்பங்களினால் சூழப்பட்ட தொடரும் பாதகமான சூழ்நிலைகள் இத்தகைய தன்மைக்கு முக்கிய பொறுப்பாக இருந்தன.

எனினும், சுற்றுலா வருகையை பிரதேசவாரியாக நோக்குமிடத்து இவ் வீழ்ச்சி மேற்கு ஐரோப்பா, வடஅமெரிக்கா என்பனவற்றிலிருந்தான வருகையிலேயே முழுமையாகப் பிரதிபலித்தது. மாறாக, கிழக்கு ஐரோப்பா, அவுத்திரலாசியா, ஆபிரிக்கா, ஆசியா போன்ற ஏனைய பிரதேசங்களிலிருந்தான வருகைகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைக் காட்டின. இவ்வித தன்மைகளின் விளைவாக, மிகப்பெரும் சுற்றுலாச் சந்தையான மேற்கு ஐரோப்பாவின் பங்கு 62 சதவீதத்திலிருந்து 51 சதவீதத்திற்கு மிகக்கூடியளவில் வீழ்ச்சியடைந்த வேளையில் இரண்டாவது பெரும்சந்தையான ஆசியாவின் பங்கு 29 சதவீதத்திலிருந்து 37 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. கிழக்குஐரோப்பா, அவுத்திரலாசியா என்பனவற்றின் பங்குகளும் 1988இன் இதேகாலப்பகுதியினைவிட அதிகரித்தன.

மொத்தச் சுற்றுலா வருகைகளில் 65 சதவீதம் அட்டவணையிடப்பட்ட பிரதேசங்களுக்கிடையிலான பறப்புக்கள் மூலமாக வருகைதந்த வேளையில் மற்றொரு 26 சதவீதம் பிரதேசங்களுக்குள்ளேயான பறப்புக்கள் மூலம் கொண்டு வரப்பட்டன. மிகுதி 9 சதவீதத்திற்கும் ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்கள் வகைகூறின. தேசிய வானூர்திப் பணியான ஏயர் லங்கா 1988இன் முன்னரைப்பகுதியில் கொண்டுவந்த 39 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்தச் சுற்றுலா வருகையில் 51 சதவீதத்தினைக் கொண்டு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

(அ) வலு

நீர் மின்வலு உருவாக்கத்தின் அதிகரிப்புடன் 1989இன் முதலரைப் பகுதியில் வலுநிலைமை முன்னேற்றமடைந்தது. நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்தமையின் காரணமாக இலங்கை மின்சபை நீர்மின்வலு உருவாக்கத்தின் மூலம் நாட்டின் வலுத்தேவையின் பெரும்பங்கினை ஈடுசெய்யக்கூடியதாகவும், வெப்ப மின்வலு உருவாக்கத்தில் தங்கியிருப்பதனைக் குறைக்கக்கூடியதாகவும் இருந்தது. எனினும் வலுத்துறை பன்னாட்டுச் சந்தையில் பெற்றோலியத்தின் விலைகள் மேல்நோக்கி உயர்ந்தமை, நாட்டின் குழப்ப நிலைமைகள் என்பனவற்றின் காரணமாக பாதகமான தன்மைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதன்படி 1989இன் முன்னரைப்பகுதியில் உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வி கணிசமானளவிற்குக் குறைவடைந்தது. நாட்டின் குழப்ப நிலைமைகளின் காரணமாக மின்வலுவிற்கான கேள்வியும் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது.

1989 யூன் இறுதியில், மின்வலு உருவாக்கத்தின் மொத்த நிறுவப்பட்ட இயலளவு 1,208 மெகாவாட்டாக மாற்றமின்றி விளங்கி நீர்மின்வலுவை அடிப்படையாகக் கொண்ட 938 மெகாவாட்டையும் வெப்பமின்வலுவை அடிப்படையாகக் கொண்ட 270 மெகாவாட்டையும் உள்ளடக்கியிருந்தது. 1989இன் முன்னரைப்பகுதியில் இலங்கை மின்சபையின் மொத்த வலு உருவாக்கம் 14,580 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களாக அமைந்து 1988இன் முன்னரைப்பகுதியிலும் பார்க்க 2 சதவீதம் உயர்வானதாக விளங்கியது. நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் முன்னேற்றமடைந்தமையினால் 1989இன் முன்னரைப்பகுதியில் மொத்த நீர்மின்வலு உருவாக்கம் முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியினைவிட 14,060 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களுக்கு 14 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன்படி மொத்த வலு உருவாக்கத்தில் நீர்மின்வலுவின் பங்கு 1988 முன்னரைப்பகுதியின் 86 சதவீதத்திற்கெதிராக 96 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இதற்கேற்ப, வெப்ப வலு உருவாக்கம் 516 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களுக்கு 74 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் 1989இன் முன்னரைப் பகுதியின் மொத்த வலு உருவாக்கத்தில் 4 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறியது. இது மின்வலு உருவாக்கத்திற்கு பெற்றோலியத்தில் தங்கியிருப்பதனையும் வலு உருவாக்கத்திற்கான அலகின் செலவினையும் குறைத்தது.

1989இன் முன்னரைப்பகுதியில் மின்வலுவின் மொத்த விற்பனை 12,030 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களாக விளங்கியதுடன், இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியினைவிட சிறிதளவு குறைவானதாக இருந்தது. நாட்டின் குழப்ப நிலைமைகளின் காரணமாக உள்ளூராட்சி மன்றங்கள் கைத்தொழில், வர்த்தக நோக்கங்களுக்கான மின்வலு விற்பனைகள் முறையே 3 சதவீதத்தினாலும் 2 சதவீதத்தினாலும் 1 சதவீதத்தினாலும் சிறிதளவில் வீழ்ச்சியடைந்த வேளையில் வீடு மற்றும் சமயத்துறைகளுக்கான விற்பனைகள் 4 சதவீதத்தினால் சிறிதளவிற்கு அதிகரித்தன. அதேவேளை ஆய்விற்குரிய காலப்பகுதியில் மின்வலுவிற்கான தீர்வை அமைப்பு மாற்றமின்றியிருந்தது.

1989 யூனுடன் முடிவடைந்த ஆறு மாதங்களில் மசகெண்ணெய் இறக்குமதியின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூபா நியதிகளில் ரூ. 25,840 இலட்சத்திற்கு 23 சதவீதத்தினாலும், சஎஉ நியதிகளில் 590 இலட்சத்திற்கு 25 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி முற்றாக மசகெண்ணெய் இறக்குமதியின் குறைந்த அளவு காரணமாக ஏற்பட்டதாகும். 1989இன் முதல் ஆறு மாதங்களில் இறக்குமதியான மசகெண்ணெய் அளவு 1988 இன் நேரிணையான காலப்பகுதிக்குரிய 902,588 மெற்றிக் தொன்களிலிருந்து 626,787 மெற்றிக் தொன்களுக்கு 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு 1989 சனவரியிலிருந்து பெப்புருவரிவரை ஐந்துகிழமைகளுக்கு தூய்மி மூடப்பட்டிருந்தமையே பெருமளவு காரணமாகும். இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 4.1.

வலுத்துறையின் முக்கிய பண்புகள்

| விடயம் | | அலகு | சனவரி - யூன் 1988 | சனவரி - யூன் 1989* | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. | பெற்றோலியம் | | | | |
| 1.1. | ஏற்றுமதியின் பெறுமதி - பெற்றோலிய உற்பத்திகள் | ரூ. ப. இ. | 1,231.8 | 1,077.0 | — 12.6 |
| | | சிஎஉ. ப. இ. | 29.1 | 25.0 | — 14.1 |
| 1.2. | இறக்குமதிசெய்யப்பட்ட அளவு | | | | |
| 1.2.1. | மசகெண்ணெய் .. | மெ. தொ. | 893,973 | 626,787 | — 29.9 |
| 1.2.2. | சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் .. | மெ. தொ. | 95,999 | 180,741 | 88.3 |
| 1.3. | இறக்குமதிகளின் பெறுமதி | | | | |
| 1.3.1. | மசகெண்ணெய் .. | ரூ. ப. இ. | 3,354.9 | 2,584.0 | — 23.0 |
| | | சிஎஉ. ப. இ. | 79.2 | 59.4 | — 25.0 |
| 1.3.2. | சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் .. | ரூ. ப. இ. | 403.5 | 1,202.0 | —197.9 |
| | | சிஎஉ. ப. இ. | 9.5 | 27.6 | —190.5 |
| 1.4. | மசகெண்ணெயின் சராசரி விலை .. | ரூ. பீப்பா | 511.82 | 558.00 | 9.0 |
| | | சிஎஉ. பீப்பா | 12.09 | 12.83 | 6.1 |
| 1.5. | யூன் முடிவில் உள்நாட்டு விலை | | | | |
| 1.5.1. | பெற்றோல் .. | ரூ. லீற்றர் | 13.50 | 16.00 | 18.5 |
| 1.5.2. | மண்ணெண்ணெய் .. | ,, | 6.58 | 6.58 | — |
| 1.5.3. | தன்னியக்க டீசல் .. | ,, | 8.13 | 8.55 | 5.2 |
| 1.5.4. | பார டீசல் .. | ,, | 7.83 | 8.23 | 5.1 |
| 1.5.5. | உலை எண்ணெய் | | | | |
| | 500 .. | ,, | 4.22 | 4.55 | 7.8 |
| | 800 .. | ,, | 3.87 | 4.20 | 8.5 |
| | 1000 .. | ,, | 3.72 | 4.05 | 8.9 |
| 1.6. | உள்நாட்டு நுகர்வு | | | | |
| 1.6.1. | பெற்றோல் .. | மெ. தொ. | 78,168 | 73,119 | — 6.5 |
| 1.6.2. | மண்ணெண்ணெய் .. | ,, | 81,032 | 65,418 | — 19.3 |
| 1.6.3. | தன்னியக்க டீசல் .. | ,, | 271,947 | 209,541 | — 22.9 |
| 1.6.4. | பார டீசல் .. | ,, | 40,455 | 9,929 | — 75.5 |
| 1.6.5. | உலையெண்ணெய் .. | ,, | 276,042 | 80,013 | — 71.0 |
| 2. | மின்வலு | | | | |
| 2.1. | நிறுவப்பட்ட இயலளவு .. | மெகாவாட் | 1,208.45 | 1,208.45 | — |
| 2.1.1. | நீர்மின் .. | ,, | 938.45 | 938.45 | — |
| 2.1.2. | வெப்பமின் .. | ,, | 270.00 | 270.00 | — |
| 2.2. | உற்பத்திசெய்யப்பட்ட அலகுகள் .. | ப. இ. கி. வா. ம. | 1,432.7 | 1,458.0 | 1.8 |
| 2.2.1. | நீர்மின் .. | ,, | 1,232.9 | 1,406.4 | 14.1 |
| 2.2.2. | வெப்பமின் .. | ,, | 199.8 | 51.6 | — 74.2 |
| 2.3. | மொத்த விற்பனை .. | ப. இ. கி. வா. ம. | 1,215.4 | 1,203.5* | — 1.0 |
| 2.3.1. | வீட்டுப்பாவனை .. | ,, | 205.5 | 214.5 | 4.4 |
| 2.3.2. | கைத்தொழில் .. | ,, | 465.1 | 457.7 | — 1.6 |
| 2.3.3. | வர்த்தகம் .. | ,, | 228.6 | 225.8 | — 1.2 |
| 2.3.4. | உள்ளூராட்சி மன்றங்கள் .. | ,, | 316.1 | 305.5 | — 3.3 |

*தற்காலிகமானவை

மூலம் : இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக 1989இன் முன்னரைப்பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதி முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதிக்கான 95,999 மெற்றிக் தொன்களிலிருந்து 180,741 மெற்றிக் தொன்களுக்கு 88 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அதேவேளை இவ்விரு காலப்பகுதிகளுக்குமிடையில் 'மசகெண்ணெயின் சராசரி விலை பீப்பாய் ஒன்றிற்கு ரூ. 512 (பீப்பாய் ஒன்றிற்கு ஐ. அ. டொ 16.56) இலிருந்து பீப்பாய் ஒன்றிற்கு ரூ.558 ஆக (பீப்பாய் ஒன்றிற்கு ஐ. அ. டொ16.57) அதிகரித்தது.

பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு நுகர்வு 1988இன் முன்னரைப் பகுதியின் 824,377 மெற்றிக் தொன்களிலிருந்து 1989இன் இதே காலப் பகுதியில் 464,688 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியுற்றது. இதற்கு தொடர்ச்சியான குழப்ப நிலைமைகளும், வெப்பத்தை அடிப்படையாகக் கொண்ட மின்வலு உருவாக்கத்திற்கு பாரடீசல் குறைந்தளவில் பயன்படுத்தப்பட்டமையுமே பெருமளவிற்குக் காரணமாகும். உலை எண்ணெய் (196,029 மெற்றிக் தொன் அல்லது 71 சதவீதம்) தன்னியக்க டீசல் (62,406 மெற்றிக் தொன்கள் அல்லது 23 சதவீதம்) பாரடீசல் ( 30,526 மெற்றிக் தொன்கள் அல்லது 76 சதவீதம்) மண்ணெண்ணெய் (15,614 மெற்றிக் தொன்கள் அல்லது 19 சதவீதம்) என்பனவற்றின் விற்பனைகளில் கணிசமானளவு வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதே சமயம் சிறப்புடீசல், பெற்றோலியம் என்பனவற்றின் விற்பனைகள் முறையே 33 சதவீதம் அல்லது 3,500 மெற்றிக் தொன்களினாலும் 7 சதவீதம் அல்லது 5,049 மெற்றிக் தொன்களினாலும் வீழ்ச்சியடைந்தன.

1989இன் முன்னரைப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகள் 1988இன் முன்னரைப்பகுதியின் 304,921 மெற்றிக் தொன்களிலிருந்து 255,135 மெற்றிக் தொன்களுக்கு 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இதே போன்று 1989இன் முன்னரைப்பகுதியில் பெற்றோலிய ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதிக்குரிய ரூ. 12,320 இலட்சத்திலிருந்து (சிஎஉ 290 இலட்சம்), ரூ. 10,770 இலட்சத்திற்கு (சிஎஉ 250 இலட்சம்) ரூபாய் நியதிகளில் 13 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 14 சதவீதம்) வீழ்ச்சியடைந்தன.

பன்னாட்டு சந்தையில் காணப்பட்ட பெற்றோலியத்திற்கான உயர்ந்த விலைகளை ஈடுசெய்யும் பொருட்டு 1989 ஏப்பிரல் 17ஆம் நாளிலிருந்து பெற்றோலியத்தின் விலைகள் மேல் நோக்கித் திருத்தப்பட்டன. 19 சதவீதத்தினால் உயர்வடைந்த பெற்றோலியத்தின் விலை தவிர்ந்த ஏனைய பெற்றோலிய உற்பத்திகளின் விலைகள் 5 - 10 சதவீத வீச்சுகளில் அதிகரித்தன. எனினும், மண்ணெய்ணெயின் விலை மாற்றமின்றியிருந்தது.

(ஆ) போக்கு வரத்து

1989இன் முன்னரைப்பகுதியில் போக்குவரத்துத்துறையின் தொழிற்பாடுகள் குறிப்பிடத்தக்களவிற்கு மோசமடைந்தன. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதேச சபைகளின் நடவடிக்கைகள் உள்நாட்டுக் குழப்பங்களினாலும், ஊர்தித்தொகுதிகள் குறைக்கப்பட்டமையினாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. உள்நாட்டுக் குழப்பங்களின் விளைவாக பயணிகள் மற்றும் சரக்குப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டமையின் காரணமாக இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாடுகளும் கட்டுப்படுத்தப்பட்டன. மறுபுறத்தில் தனியார் துறை, ஊர்திகளினதும், உதிரிப்பாகங்களினதும் உயர்ந்த செலவு காரணமாக அதன் தொழிற்பாடுகளை விரிவாக்க முடியாமல் இருந்தது. அதேவேளை 1986 யூன் மாதத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின பிரதேச சபைகளின் ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தம் காரணமாக தீவு முழுவதற்குமான போக்குவரத்துப் பணிகள் கடுமையாகப்பாதிக்கப்பட்டன.

1989இன் முன்னரைப்பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதேச சபைகளின் தொழிற்பாட்டு அளவு மிகக்கூடியளவில் வீழ்ச்சியடைந்தது. தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் 1400 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 25 சதவீத வீழ்ச்சியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 4.2.

போக்குவரத்துத்துறையின் அடிப்படைப் பண்புகள்

| விடயம் | சனவரி - யூன் 1988 | சனவரி - யூன் 1989 * | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் (எண்ணிக்கை) | | | |
| 1.1. இ. ம. போ. சபையின் பேருந்துகள் | 84 | 297 | 253.6 |
| 1.2. தனியார் சொகுசு வண்டிகள் | 502 | 333 | — 33.7 |
| 1.3. தனியார், வாடகை வண்டிகள் | 3,951 | 6,109 | 54.6 |
| 1.4. உந்து ஈருருளிகள் | 13,947 | 27,511 | 97.3 |
| 1.5. இரட்டை நோக்கங்களுக்கான வண்டிகள் | 1,586 | 1,641 | 3.5 |
| 1.6. சரக்கு கொண்டுசெல்வதற்கான வண்டிகள் | 1,387 | 1,437 | 3.6 |
| 1.7. நில ஊர்திகள் | 1,258 | 1,186 | — 5.7 |
| 1.8. ஏனையவை | — | 1 | — |
| 2. இ. ம. போ. சபையின் தொழிற்பாடுகள் | | | |
| 2.1. தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் (ப. இ.) | 185.8 | 139.5 | — 24.9 |
| 2.2. பயணிகள் கிலோமீற்றர்கள் (ப. இ.) | 8,355.2 | 6,876.5 | — 17.6 |
| 2.3. செயற்பாட்டு வருவாய் (ரூ. ப. இ.) | 1,379.0 | 1,142.2 | — 17.2 |
| 2.4. செயற்பாட்டுச் செலவு (ரூ. ப. இ.) | 1,516.0 | வி.கி. | — |
| 2.5. செயற்பாட்டு இழப்பு (ரூ. ப. இ.) | 137.0 | வி.கி. | — |
| 3. இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாடுகள் | | | |
| 3.1. தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் (ப. இ.) | 3.9 | 3.6 | — 7.7 |
| 3.2. பயணிகள் கிலோமீற்றர்கள் (ப. இ.) | 1,047.0 | 971.4 | — 7.2 |
| 3.3. சரக்குத்தொன் கிலோமீற்றர்கள் (ப. இ.) | 108.3 | 85.3 | — 21.2 |
| 3.4. மொத்த வருவாய் (ரூ. ப. இ.) | 238.1 | 212.6 | — 10.7 |
| 3.5. மொத்தச் செலவு (ரூ. ப. இ.) | 403.1 | 370.0 | — 8.2 |
| 3.6. மதிப்பிடப்பட்ட தொழிற்பட்ட செலவு (ரூ. ப. இ.) | 164.9 | 157.4 | — 4.5 |

* மதிப்பிடப்பட்டது.

மூலங்கள் : இலங்கைப் போக்குவரத்துச் சபை,
இலங்கை புகையிரதத் திணைக்களம்,
உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுசெய்தது. தொழிற்பாட்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பல காரணிகள் காரணமாக இருந்தன. முதலாவது, உள்நாட்டில் குழப்பங்களினால் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அட்டவணையிடப்பட்ட பணிகள் ஆங்காங்கே தடைப்பட்டன. இரண்டாவது, ஊர்த்தித் தொகுதியின் நிலையில் பொதுவாக ஏற்பட்ட குறைப்பும் தொழிற்பாடுகள் அடிக்கடி பாதிக்கப்பட்டமைக்கு காரணமாக இருந்தது. தற்போதுள்ள ஊர்தித் தொகுதிகளுடன் மேலதிகமாக 212 புதிய பேருந்துகள் மொத்தமாகச் சேர்க்கப்பட்டபோதும், ஊர்த்தித் தொகுதிக்கு ஏற்பட்ட அழிவையும், சேதத்தையும் கருத்திற்கொள்கையில் ஊர்த்தித் தொகுதியை பழையநிலைக்கு கொண்டு வருவதற்கு இது முழுமையாகப் போதுமானதாக இல்லை. அத்துடன் ஊர்தியின் சாதாரண பேணல் தேவைகளை ஈடுசெய்வதற்கான உதிரிப்பாகங்களிலும் கடுமையான பற்றுக்குறை காணப்பட்டது. இதன்விளைவாக நாளாந்தத் தேவையான 6009 பேருந்துகளுக்கெதிராக நாளொன்றுக்கு சராசரியாக தொழிற்படுத்தப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை ஏறத்தாள 4269 ஆக மட்டுமே விளங்கியது. அதேவேளை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதேச சபைகளின் தொழிற்பாடுகள் 1989 யூன் மாதத்தில் வேலை நிறுத்தப்பட்டமையின் விளைவாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக முன்னைய ஆண்டின்இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பயணிகள் கிலோ மீற்றர் 18 சதவீதத்தினால் 68,770 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதேச சபைகளின் வருவாய் ரூ.11,420 இலட்சத்திற்கு 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1989இன் முன்னரைப்பகுதியில் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியினைவிட தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் 36 இலட்சமாக விளங்கி 8 சதவீதத்தினாலும், பயணிகள் கிலோமீற்றர் 9,710 இலட்சமாக விளங்கி 7 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை சரக்குத்தொன் கிலோமீற்றரினால் எடுத்துக்காட்டப்படும் சரக்குப் பணிகள் 853 இலட்சத்திற்கு 27 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இத்தாழ்ந்தமட்ட தொழிற்பாட்டிற்கு ஆய்விற்குரிய காலம் முழுவதும் அட்டவணையிடப்பட்ட பணிகள் இடைநிறுத்தப்பட்டமையும், இரத்துச் செய்யப்பட்டமையுமே பெருமளவிற்குக் காரணங்களாகும். யூன் மாதத்தில் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தங்களினால் இந்நிலைமை மேலும் மோசமடைந்து புகைவண்டிப் பணிகளிலும் பிரதிபலித்தது. இதன்விளைவாக ஆண்டின் முன்னரைப்பகுதியில் புகைவண்டிப் பகுதியின் வருவாய் ரூ. 2,120 இலட்சத்திற்கு 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1989இன் முன்னரைப்பகுதியில் ரூ. 3,700 இலட்சம் கொண்ட மொத்த செலவினத்திற்கெதிராக இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு இழப்பு ரூ. 1,570 இலட்சமாக விளங்கியது.

தனியார்துறையினால் வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் 1989இன் முன்னரைப்பகுதியில் மேலும் வீழ்ச்சியடைந்தன. தனியார் பேருந்து போக்குவரத்து திணைக்களத்தில் புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட தனியார் சொகுசு வண்டிகளினதும், பேருந்துகளினதும் மொத்த எண்ணிக்கை 735இற்கு மூன்றிலொன்றினால் வீழ்ச்சியுற்றது. இதற்கு ஊர்திகளினதும், உதிரிப்பாகங்களினதும் உயர்ந்த செலவும் இத்தொழிலில்கிடைத்த குறைந்தளவு இலாபமுமே காரணமாகும். இதேவேளை 1989இன் முன்னரைப்பகுதியில் ஊர்திப்பதிவுகளை ஆண்டுதோறும் புதுப்பித்தலும், 8 சதவீதத்தினால் குறைவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. விலைகள்

1989இன் முன்னரைப்பகுதியில் நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் முன்னைய ஆண்டின் நேரிணையான காலப் பகுதியினைவிட குறைவாக இருந்தது. உணவு விலைகளின் அதிகரிப்பு வீதத்தில் ஏற்பட்ட குறைவே இதற்குக் காரணமாகும். தேங்காய், தேங்காயெண்ணெய், வெங்காயம் போன்ற குறிப்பிட்ட விடயங்களின் விலைகள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. மாறாக அரிசி, மிளகாய், சீனி, மரக்கறிகள், மாட்டிறைச்சி, முட்டை என்பனவற்றின் விலைகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. உணவு விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு வழங்கல் காரணிகளே முக்கிய பொறுப்பாக இருந்தன. 1988 நவெம்பர்/திசெம்பர் மாதங்களில் காணப்பட்ட அமைதியின்மைக்குப் பின்னர் முன்னேற்றமடைந்த பாதுகாப்பு நிலைமைகள் 1988இன் இறுதி இரு மாதங்களிலும் செயற்கை முறையில் உயர்மட்டத்தை அடைந்த விலைகள் 1989இன்முதலிரு மாதங்களிலும் அதிலிருந்தும் விடுபட்டமையைக் காட்டின. எனினும் மாச்சிலிருந்து விலைகளின் அதிகரித்த போக்குகள் மீண்டுமொருமுறை அவதானிக்கப்பட்டன. 1989 மாச்சில் இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்துடன் சிகரட்மற்றும் குடிவகைகளின் விலைகள் மேல்நோக்கி உயர்த்தப்பட்டன. ஏப்பிறலில், பெற்றோலிய, தன்னியக்க டீசல் என்பனவற்றின் விலைகளும் மேல்நோக்கிஉயர்த்தப்பட்டன.

1989இன் முன்னரைப்பகுதியில் நாணய விரிவாக்க வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் 1989இல் விலைகளின் அதிகரிப்பில் மெதுவான போக்குக் காணப்பட்டமைக்கு உதவியிருக்கலாம் போல் தோன்றுகின்றது. வங்கி வீதத்தில் ஏற்பட்ட மேல்நோக்கிய திருத்தம், வர்த்தக வங்கிக் கொடுகடன் மீதான பகுதியளவு உச்சவரம்பு போன்ற நாணய வழிமுறைகள் ஆண்டின் பின்னரைப்பகுதியில் பணவீக்க வீதத்தினை மிதப்படுத்துவதற்கு ஓரளவு உதவியிருக்கலாம்.

### (அ) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்

1989இன் முதல் ஆறு மாதங்களில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1988இன் சராசரி மட்டத்தினைவிட 7.1 சதவீதத்தினால் உயர்வுற்றது 1988இன் முன்னரைப்பகுதியில் காணப்பட்ட 10.9 சதவீதம் கொண்ட பெருமளவு அதிகரிப்புடன் இது ஒப்பிடத்தக்கதாகும். 1989 யூனுடன் முடிவடைந்த 12 மாதங்களில் புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் சுட்டெண் 1987/88இன் நேரிணையான காலப்பகுதியில் காணப்பட்ட 14.1 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 11.1 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

1989இன் முதல் ஆறு மாதங்களில் உணவு விலைகள் 6.3 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இது 1988இன் முன்னரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பு வீதத்தினைவிட (12.4 சதவீதம்) ஏறத்தாள அரைப்பங்காகும். ஆண்டின் முன்னரைப்பகுதியில் அரிசி, மிளகாய், மரக்கறிகள், சீனி, இறைச்சி, முட்டை என்பனவற்றின் விலைகள் மிகக்கூடியளவில் உயர்வடைந்தன. எனினும் தேங்காய், தேங்காயெண்ணெய், வெங்காயம் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் இவ்வதிகரிப்புக்களை ஓரளவு ஈடுசெய்தன. வரட்சியின் காரணமாக ஏற்பட்ட பயிர்ச்சேதம், அரிசி, மிளகாய் என்பனவற்றின் விலைகள் உயர்விற்குப் பொறுப்பாக இருந்தன. உலகச்சந்தை விலைகள் உயர்வடைந்தமையின் விளைவாக சீனியின் விலைகள் உயர்வுற்றன. மாட்டிறைச்சியின் விலை அதிகரிப்பிற்கு பற்றுக்குறையான வழங்கல் காரணமாக இருந்தவேளையில் முட்டையின் விலை உயர்விற்கு உயர்ந்த உற்பத்திச் செலவு ஓரளவு காரணமாக இருந்தது. 1989இல் தேங்காய் உற்பத்தி மீள்நன்னிலையடைந்தமை தேங்காய், தேங்காய் எண்ணெய் என்பனவற்றின் விலைகளில் மிகக்கூடியளவு வீழ்ச்சியை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5.1

துணைச் சுட்டெண்களில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மாற்றங்கள் *
1988, 1989இன் முதல் அரைப்பகுதி

| | 1988 | 1989 |
|---|---|---|
| உணவு .. .. .. | 12.4 | 6.3 |
| ஆடை .. .. .. | 3.4 | 7.6 |
| எரிபொருளும் வெளிச்சமும் .. .. | 9.5 | 9.8 |
| பல்வகை .. .. .. | 8.3 | 9.7 |
| பொதுவான .. .. .. | 10.9 | 7.1 |

* முதல் 6 மாதங்களுக்கான சராசரி, முன்னைய ஆண்டுச் சராசரியுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

முதல் ஆறு மாதங்களில் உடைக்கான துணைச்சுட்டெண் முன்னைய ஆண்டின் அதிகரிப்பான 3.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7.6 சத வீதத்தினுல் அதிகரித்தது. உடையின் விலை உயர்வடைந்தமைக்கு கூலிகளில் ஏற்பட்ட திருத்தம், வலுவின் அதிகரித்த செலவு என்பனவற்றின் விளைவாகத் தோன்றிய உயர்ந்த உற்பத்திச் செலவே முக்கிய காரணமாகும். எரிபொருள் மற்றும் வெளிச்சத்தின் விலைகள் 9.8 சதவீதத்தினுல் அதிகரித்தவேளையில் பல் வகை விடயங்களுக்கான விலைகள் 9.7 சதவீதத்தினுல் உயர்வடைந்தன.

## (ஆ) மொத்த விற்பனை விலைச்சுட்டெண்

மொத்த விற்பனை விலைச்சுட்டெண் முதலாந்தர சந்தை மட்டத்திலுள்ளவிலை அசைவுகளின் குறிகாட்டியாகும். இவ்விலைச்சுட்டெண் தேயிலை மற்றும் தெங்கு உற்பத்திகள் போன்ற முக்கிய ஏற்றுமதி விடயங்களின் விலைகளில் ஏற்படும் அசைவுகளை மிக நுணுக்கமாக அளவிடுகிறது. 1989இன் முதற்சில மாதங்களில் தேங்காய், தேங்காயெண்ணெய் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட மிகக் கூடியளவு வீழ்ச்சி பொதுவான சுட்டெண்ணில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன்விளைவாக 1989இன் முதல் ஆறு மாதங்களில் மொத்த விற்பனை விலைச்சுட்டெண் 2.6 சதவீதங்கொண்ட மிகக்குறைந்த அதி கரிப்பினைப் பதிவுசெய்தது. முதல் ஆறு மாதங்களில் நெல், பயறுவகை செத்தல் மிளகாய் என்பனவற்றின் உற்பத்தியாளர் விலைகளும் அரிசி, சீனி என்பனவற்றின் (கொ கா. க.) விலைகளைப் போன்று மிகக்கூடுதலாக அதிகரித்தன. எனினும் தேங்காய், தேங்காயெண்ணெய் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட 25 சத வீதத்திற்கும் கூடுதலான வீழ்ச்சி இவ்வதிகரிப்புக்களின் தாக்கத்தைப் பெரும் பாலும் முழுமையாக எதிரீடு செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5.2.

விலைச் சுட்டெண்களின் சராசரி சதவீத அதிகரிப்புகள்

1982 — 1989

| ஆண்டு | கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் | மொத்த விற்பனை விலைச் சுட்டெண் |
|---|---|---|
| 1982 | 11 | 5 |
| 1983 | 14 | 25 |
| 1984 | 17 | 26 |
| 1985 | 1.5 | — 15 |
| 1986 | 8.0 | — 2.9 |
| 1987 | 7.7 | 13.4 |
| 1988 | 14.0 | 17.8 |
| 1989 | 7.1* | 2.6* |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* முதல் ஆறு மாதங்கள்.

## (இ) ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள்

### கொழும்பு தேயிலை ஏலங்கள்

1988இன் முன்னரைப்பகுதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டிய கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்ட அனைத்து தேயிலைகளினதும் சராசரி விலைகள் 1989இன் முன்னரைப்பகுதியில் அதேயளவு ஆற்றலைக் காட்டத்தவறின. 1989இன் முன்னரைப்பகுதியில் கொழும்பு தேயிலை ஏலங்களில் விற்கப்பட்ட அனைத்து தேயிலைகளினதும் சராசரி மொத்த விலை கடந்த ஆண்டின் ஒப்பிடத்தக்க காலப்பகுதியின் அதிகரிப்பான 17 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் கிலோக் கிருமொன்றுக்கு ரூ.46.71இற்கு 5 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தது. உயர அடிப்படையில், தாழ்நிலத் தேயிலை 10 சதவீதமான உயர்ந்த அதிகரிப்பினைக் காட்டியவேளையில் உயர்நில மத்தியநிலதேயிலைகள் முறையே 3 சதவீத, 1 சதவீத அதிகரிப்புக்களைக் காட்டின. 1989இன் முன்னரைப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் அளவு 924 இலட்சம் கிலோக்கிரும்களுக்கு 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

### இலண்டன் தேயிலை ஏலங்கள்

1989இன் முன்னரைப்பகுதியில் இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட அனைத்து தேயிலைகளினதும் சராசரி விலை கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியினைவிட 106.01 பென்சுகளுக்கு 2 சதவீதத்தினால் உயர்வடைந்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் இலண்டன் ஏலங்களில் தேயிலை விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டமைக்கு, பாதகமான வானிலை நிலைமைகள், உயர்ந்து செல்லும் உள்நாட்டு நுகர்வு, சோவியத் சமவுடைமைக் குடியரசுகளின் ஒன்றியத்திற்கான அதிகரித்த விற்பனை என்பனவற்றின் விளைவாக குறிப்பாக இந்தியாவிலிருந்தான வழங்கல் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். தரமான தேயிலைகளின்மூலம் பெறப்பட்ட சிறந்த விலைகளும் சராசரி விலைகள் உயர்வடைய ஓரளவுக்கு உதவின. ஆய்விற்குரிய காலப்பகுதியில் இலங்கையும், கென்யாவும் மட்டுமே இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட அவற்றினது தேயிலையின் அளவினை அதிகரிக்கக் கூடியனவாக இருந்தன. 1989 யூனில் பெறப்பட்ட தேயிலையின் சராசரி விலை கிலோக் கிருமொன்றுக்கு 113.86 பென்சுகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6.3.

கொழும்பு தேயிலை ஏல விற்பனைகளின் புள்ளிவிபரங்கள்

(தேறிய விலை அடைப்புக்குள்)

| | விற்க்கப்பட்ட அளவு ப. இ. கி. கி. | | | | | | | | சராசரி விலை ரூ./கிலோவுக்கு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உயர் | | நடுத்தர | | தாழ் | | மொத்தம் | | உயர் | | நடுத்தர | | தாழ் | | எல்லாத் தேயிலையும் | |
| | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 |
| சனவரி | 4.5 | 7.4 | 4.0 | 5.4 | 6.8 | 7.5 | 15.4 | 20.3 | 47.83 (43.74) | 42.73 (41.89) | 42.56 (40.91) | 37.87 (37.56) | 46.23 (42.93) | 42.18 (41.27) | 45.76 (42.65) | 41.22 (40.50) |
| பெப்புருவரி | 5.1 | 4.9 | 3.9 | 3.3 | 7.2 | 5.9 | 16.2 | 14.2 | 51.67 (45.61) | 46.20 (45.09) | 44.85 (42.22) | 39.05 (38.78) | 47.85 (43.88) | 45.47 (44.62) | 48.35 (44.03) | 44.20 (43.40) |
| மாச்சு | 4.9 | 4.3 | 4.1 | 3.2 | 9.3 | 5.5 | 18.3 | 13.0 | 52.17 (47.88) | 49.72 (47.81) | 42.42 (42.63) | 42.37 (42.04) | 44.95 (43.93) | 49.31 (47.53) | 46.34 (44.49) | 47.72 (46.27) |
| ஏப்பிரல் | 3.9 | 3.3 | 2.9 | 2.6 | 5.7 | 3.3 | 12.5 | 9.2 | 49.64 (46.57) | 49.91 (47.94) | 42.75 (42.14) | 43.20 (42.74) | 43.93 (43.25) | 54.70 (50.81) | 45.45 (44.04) | 49.56 (47.51) |
| மே | 8.1 | 5.7 | 5.5 | 4.1 | 8.0 | 6.0 | 21.6 | 15.9 | 40.95 (40.73) | 51.25 (49.24) | 39.73 (39.62) | 46.96 (45.95) | 43.53 (42.97) | 56.56 (52.11) | 41.58 (41·27) | 52.18 (49.49) |
| ஜூன் | 8.8 | 7.5 | 6.3 | 5.0 | 10.3 | 7.0 | 25.4 | 19.6 | 40.93 (40.70) | 47.29 (46.71) | 40.28 (40.15) | 44.38 (44.14) | 42.40 (42.09) | 50.75 (48.91) | 41.36 (41.12) | 47.75 (46.82) |
| முதலரைப்பகுதி | 35.4 | 33.2 | 26.8 | 23.7 | 47.4 | 35.4 | 109.6 | 92.4 | 45.91 (43.46) | 47.32 (46.09) | 41.77 (40.91) | 42.17 (41.74) | 44.66 (43.13) | 49.23 (47.09) | 44.36 (42.69) | 46.71 (45.35) |

மூலம் : கொழும்பு தரகர்கள் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5.4

கொழும்பு இறப்பர் ஏல விற்பனையின் புள்ளிவிபரங்கள்

| | விற்பனை | | | | (மெற்றிக் தொன்கள்) | | | | விலைகள் | | | | | | (ரூ. கி. கி.) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தட்டை | | லேட்டெக்ஸ் | | கழிவு | | மொத்தம் | | ஆர்.எஸ்.எஸ்1 | | ஆர்.எஸ்.எஸ்2 | | லேட்டெக்ஸ்IX | | இல.1 | | கழிவு இல. 1 | |
| | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 |
| சனவரி | 1,415 | 1,192 | 2,492 | 3,792 | 341 | 368 | 4,248 | 5,059 | 22.07 | 22.65 | 21.91 | 21.28 | 21.96 | 24.40 | 21.94 | 24.09 | 21.65 | 19.06 |
| பெப்புருவரி | 1,263 | 715 | 1,712 | 1,879 | 364 | 433 | 3,339 | 3,030 | 21.67 | 22.93 | 21.41 | 21.90 | 22.39 | 24.26 | 22.34 | 24.00 | 21.78 | 19.39 |
| மாச்சு | 936 | 1,094 | 1,769 | 2,076 | 458 | 513 | 3,163 | 3,683 | 22.08 | 22.76 | 21.82 | 21.73 | 24.47 | 25.37 | 24.37 | 25.10 | 21.95 | 20.06 |
| ஏப்பிரல் | 555 | 589 | 1,197 | 1,145 | 358 | 294 | 2,110 | 2,028 | 23.75 | 22.26 | 23.54 | 21.73 | 32.83 | 25.45 | 32.55 | 25.06 | 23.07 | 20.64 |
| மே | 506 | 495 | 1,473 | 1,107 | 280 | 276 | 2,259 | 1,878 | 27.43 | 22.38 | 26.76 | 21.87 | 41.08 | 25.14 | 40.73 | 24.78 | 26.44 | 19.88 |
| யூன் | 692 | 423 | 1,421 | 823 | 379 | 343 | 2,492 | 1,589 | 33.00 | 22.59 | 31.58 | 22.12 | 53.44 | 26.16 | 52.14 | 25.69 | 31.22 | 20.16 |

மூலம் : வரையறுக்கப்பட்ட ஜோன்கீல்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கி கடந்த ஆண்டின் ஒப்பிடத்தக்க மாதத்தினைவிட 22 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைக் காட்டியதுடன் இவ்வாண்டில் இவ்ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த விலையாகவும் இருந்தது.

## கொழும்பு இறப்பர் ஏலங்கள்

1989இன் முன்னரைப்பகுதியில் அனைத்துவகைத் தட்டை இறப்பர், லேட்டெக்ஸ் கிறேப், கழிவு கிறேப் என்பனவற்றின் சராசரி விலைகள் கடந்த ஆண்டின் நேரிணையான காலப்பகுதிக்குரிய விலைகளுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. ஆர். எஸ். எஸ். 1இன் விலைகள் கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 22.58இற்கு 10 சதவீதத்தினாலும், ஆர். எஸ். எஸ். 2 கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 21.77இற்கு 11 சதவீதத்தினாலும், ஆர். எஸ். எஸ். 3 கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 21.21இற்கு 11 சதவீதத்தினாலும் வீழ்ச்சியுற்றன. லேட்டெக்ஸ் கிறேப் IX, மற்றும் 1 இன் விலைகள் 23 சதவீதத்தினால் முறையே கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 25.10இற்கும், ரூ. 24.81இற்கும் வீழ்ச்சியுற்றன. இதேபோன்று கழிவுகிறேப் IX பி. ஆர்., 2 X பி. ஆர்., 3 X பி.ஆர்., என்பனவற்றின் சராசரி விலைகள் கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 19.88இற்கும், ரூ. 19.32 இற்கும் ரூ.19.04 இற்கும் முறையே 18 சதவீதத்தினாலும், 11 சதவீதத்தினாலும், 12 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

1988இன் முன்னரைப்பகுதியில் காணப்பட்ட செழிப்பு நிலைமைகளைத் தொடர்ந்து ஆய்விற்குரிய காலப்பகுதியில் இறப்பர் விலைகள் வீழ்ச்சியடைந்தமைக்கு சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற முக்கிய இறப்பர் உற்பத்திநாடுகளிலிருந்து கிடைத்த அதிகரித்த நிரம்பலே பெருமளவிற்குக் காரணமாகும். நிரம்பிய இருப்புக்களின் விளைவாக முக்கிய நுகர்வு நாடுகளில் காணப்பட்ட மந்தமான கேள்வியும், பன்னாட்டு இயற்கை இறப்பர் அமைப்பின் அதிகரித்த இறப்பர் விற்பனையும், ஆய்விற்குரிய காலப்பகுதியில் இறப்பர் விலைகள் தாழ்வுறுவதற்குக் காரணமாயின. 1989இன் முன்னரைப்பகுதியில் இதேபோன்ற போக்கினை கொண்டிருந்த சிங்கப்பூர், இலண்டன், நியூயோர்க் சந்தைகளில் ஆர். எஸ். எஸ். 1இன் விலைகள் கடந்த ஆண்டின் நேரிணையான காலப்பகுதிக்குரிய விலைகளுடன் ஒப்பிடுகையில் முறையே 17 சதவீதத்தினாலும், 13 சதவீதத்தினாலும், 5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியுற்றன.

அட்டவணை 5.5

கொழும்புச் சந்தையில் தெங்குவிலைகளின் புள்ளிவிபரங்கள்

| | விலை ரூ./கி. கி. | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | உலர்த்திய தேங்காய் | | தேங்காய் எண்ணெய் | | உலர்த்திய தேங்காய்த் துருவல் | |
| | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 |
| சனவரி | 25.73 | 16.80 | 39.38 | 25.43 | 27.08 | 19.15 |
| பெப்புருவரி | 20.80 | 16.80 | 35.07 | 24.23 | 24.51 | 20.05 |
| மாச்சு | 20.90 | 15.13 | 33.09 | 20.94 | 22.31 | 17.74 |
| ஏப்பிரல் | 19.84 | 13.91 | 33.90 | 20.62 | 22.67 | 16.61 |
| மே | 21.20 | 14.97 | 33.98 | 19.46 | 23.47 | 17.25 |
| யூன் | 20.50 | 14.93 | 29.11 | 19.77 | 23.74 | 17.96 |

மூலம்: தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுத் தெங்குச் சந்தை

1988இன் முன்னரைப்பகுதியில் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்த தெங்கு ஏற்றுமதிகளின் சராசரி விலைகள் 1989இன் முன்னரைப்பகுதியில் மாறான போக்கினைக்காட்டின. 1989இன் முன்னரைப்பகுதியில் தேங்காய் எண்ணெய், உலர்த்திய தேங்காய், உலர்த்திய தேங்காய்த்துருவல் என்பனவற்றின் சராசரிவிலைகள் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதிக்குரிய விலைகளுடன் ஒப்பிடுகையில் கிலோக்கிராமொன்றுக்கு ரூ. 21.74இற்கும், ரூ 15.42இற்கும், ரூ.18.13இற்கும் முறையே 36 சதவீதத்தினாலும், 28 சதவீதத்தினாலும், 24 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. தெங்கு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பாதகமான வானிலை நிலைமைகளினால் கடந்தஆண்டில் கடுமையான பின்னடைவிற்குட்பட்டிருந்த முக்கிய தெங்கு உற்பத்தி நாடுகளின் தெங்கு உற்பத்தி மீள் நன்னிலையடைந்தமையே பெருமளவுக்குக் காரணமாகும்.

பன்னாட்டு தெங்குச் சந்தைகள்

1989இன் முன்னரைப்பகுதியில் முக்கியமாக தெங்கு உற்பத்தி நாடுகளின் உற்பத்தி, குறிப்பாக பாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக பாதிக்கப்பட்ட பிலிப்பைன்சின் உற்பத்தி, கடந்த ஆண்டின் அதன் தாழ்ந்த மட்டங்களிலிருந்தும் மீள்நன்னிலையடைந்தமையும் அதன்விளைவாக நிரம்பல் அதிகரித்தமையும் கடந்த ஆண்டின் ஒப்பிடத்தக்க காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பன்னாட்டுச்சந்தையின் தெங்கு விலைகளில் குறைப்பினை ஏற்படுத்தின. ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் பன்னாட்டுச்சந்தையில் தெங்கு விலைகள் குறைவடைவதற்கு சோயா மீன்எண்ணெய், பாம்எண்ணெய் போன்ற ஏனைய பதிலீட்டு உணவு எண்ணெய்களின் செறிவான போட்டியும் காரணமாக இருந்தது.

## 6. வர்த்தகமும் சென்மதி நிலுவையும்

### (அ) பொதுவான போக்குகள்

1989இன் முதலரைப்பகுதியில் சென்மதி நிலுவை, 1988இன் நேரிணையான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் மோசமான வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. 1989இன் முதல்அரைப்பகுதியில் வர்த்தகக் கணக்கிலான பற்றுக்குறை 1988இன் முதலரைப்பகுதியில் சிஎஉ 2,830 இலட்சத்திலிருந்து (ரூ. 119,790 இலட்சம்) சிஎஉ 2,930 இலட்சங்களுக்கு (ரூ. 127,490 இலட்சம்) விரிவடைந்திருக்கையில் பணிகள் கணக்கிலான பற்றுக்குறை சிஎஉ 460 இலட்சத்திலிருந்து (ரூ. 19,600 இலட்சம்) சிஎஉ 710 இலட்சத்திற்கு (ரூ. 30,890 இலட்சம்) விரிவடைந்தது. இதேவேளையில் இவ்விருகாலப்பகுதிகட்கிடையில் மாற்றல்கள் கணக்குமீதான தேறிய பெறுகைகள் சிஎஉ 1,750 இலட்சங்களிலிருந்து (ரூ. 73,990 இலட்சம்) சிஎஉ 1,920 இலட்சங்களுக்கு (ரூ. 83,410 இலட்சம்) சிறிதளவால் அதிகரித்தது. இதன்படி 1989இன் முதலரைப்பகுதியில் மதிப்பிடப்பட்ட நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியின் பற்றுக்குறையான சிஎஉ 1,540 இலட்சங்களுடன் (ரூ. 65,400 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 1,730 இலட்சங்களாக (ரூ. 74,970 இலட்சம்) விளங்கியது. 1989இன் முதலரைப்பகுதியில் சென்மதி நிலுவையின் செயலாற்றம் தேறிய மூலதன உட்பாய்ச்சலில் 40 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த மூலதனக் கணக்கில் ஏற்பட்ட பாதிப்பால் மேலும் மோசமடைந்தது. இவ்வபிவிருத்திகள் பொதுவான பற்றுக்குறையில் கிட்டத்தட்ட நான்கு மடங்கு அதிகரிப்பை ஏற்படுத்தின. இது 1988இன் முதலரைப்பகுதியிலான சிஎஉ 320 இலட்சத்திலிருந்து 1989இன் முதலரைப்பகுதியில் சிஎஉ 1,210 இலட்சங்களுக்கு அதிகரித்தது. இப்பற்றுக்குறையானது திரட்டப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களின் குறைப்பின் மூலம் ஈடுசெய்யப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6.1.

சென்மதி நிலுவை - 1988, 1989இன் முதலரைப்பகுதி

| விடயம் | சிஎஉ 10இலட்சம் | | ரூபாய் 10இலட்சம் | |
|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1988 | 1989 |
| (அ) வர்த்தக நிலுவை | – 282.9 | – 293.3 | –11,979 | – 12,749 |
| ஏற்றுமதிகள் | 543.4 | 513.0 | 23,013 | 22,324 |
| இறக்குமதிகள் | 826.3 | 806.3 | 34,992 | 35,073 |
| (ஆ) பணிகள், தேறிய | – 46.0 | – 71.4 | – 1,960 | – 3,089 |
| பெறுகைகள் | 153.9 | 135.6 | 6,494 | 5,904 |
| கொடுப்பனவுகள் | 199.9 | 207.0 | 8,454 | 8,993 |
| (இ) பொருட்கள், பணிகள், தேறிய | – 328.9 | – 364.7 | – 13,939 | – 15,838 |
| (ஈ) தனியார் மாற்றல்கள் தேறிய | 113.6 | 109.3 | 4,810 | 4,754 |
| பெறுகைகள் | 127.3 | 124.3 | 5,389 | 5,406 |
| கொடுப்பனவுகள் | 13.7 | 15.0 | 579 | 652 |
| (உ) அலுவல்சார் மாற்றல்கள், தேறிய | 61.1 | 82.4 | 2,589 | 3,587 |
| (ஊ) நடைமுறைக் கணக்கு | – 154.2 | – 173.0 | – 6,540 | – 7,497 |
| (எ) நாணயமல்லா மூலதனம், தேறிய | 92.0 | 55.0 | 3,905 | 2,386 |
| நேரடி முதலீடு | 19.1 | 8.1 | 817 | 351 |
| தனியார் நீண்டகால, தேறிய | – 16.7 | – 18.1 | – 701 | – 789 |
| உட்பாய்ச்சல் | 14.5 | 12.4 | 616 | 545 |
| வெளிப்பாய்ச்சல் | 31.2 | 30.5 | 1,317 | 1,334 |
| தனியார் குறுங்கால, தேறிய | 5.3 | 19.7 | 218 | 843 |
| அரச நீண்டகால, தேறிய | 84.3 | 45.3 | 3,571 | 1,981 |
| உட்பாய்ச்சல் | 137.3 | 102.6 | 5,813 | 4,476 |
| வெளிப்பாய்ச்சல் | 53.0 | 57.3 | 2,242 | 2,495 |
| (ஏ) ஏனைய விடயங்கள் தேறிய | 30.0 | – 2.7 | – 283 | – 737 |
| (ஐ) முழுமொத்த நிலுவை | – 32.2 | – 120.7 | – 2,918 | – 5,848 |
| (ஒ) நாணய அசைவுகள் | 32.2 | 120.7 | 2,918 | 5,848 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## (ஆ) வணிக வர்த்தகம் *

1989இன் முதலரைப்பகுதியில் ஏற்றுமதி இறக்குமதிப் பெறுமதிகள் முறையே ரூ. 248,700 இலட்சங்களாகவும் (சிஎஉ 5,720 இலட்சம்) ரூ. 376,960 இலட்சங்களாகவும் (சிஎஉ 8,670 இலட்சம்) மதிப்பிடப்பட்டுள்ளன. இதன்படி இக்காலப்பகுதியின் வர்த்தகப் பற்றுக்குறையினை 1988இன் நேரிணையான காலப்பகுதியின் பற்றுக்குறையான ரூ. 117,940 இலட்சங்களுடன் (சிஎஉ 2,790 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 128,260 இலட்சங்களாக (சிஎஉ 2,950 இலட்சம்) விளங்கியது. 1989இன் முதலரைப்பகுதியில் வர்த்தகப் பற்றுக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா நியதிகளில் 9 சதவீதமாகவும், சிஎஉ நியதிகளில் 6 சதவீதமாகவும் விளங்கியது.

* இப்பகுதியின் ஆய்வு சுங்கத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6.2.

ஏற்றுமதி வருவாய்கள்

ரூ. ப. இலட்சம் (சிஎஉ ப. இலட்சம் அடைப்புக்குள்)

| | சனவரி - யூன் 1988 | சனவரி - யூன் 1989 (ச) |
|---|---|---|
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் | 9,892.2 (233.6) | 9,172.2 (210.9) |
| 1.1. தேயிலை | 6,204.0 (146.5) | 5,273.9 (121.3) |
| 1.2. இறப்பர் | 1,982.9 (46.8) | 1,775.6 (40.8) |
| 1.3. தெங்கு | 508.0 (12.0) | 1,117.1 (25.7) |
| 1.3.1. உள்ளீட்டு உற்பத்தி | 193.3 (4.6) | 702.1 (16.1) |
| 1.3.2. ஏனையவை | 314.7 (7.4) | 415.0 (9.5) |
| 1.4. சிறு வேளாண்மை உற்பத்திகள் (அ) | 1,197.3 (28.3) | 1,005.6 (23.1) |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (அ) (ஆ) | 11,167.5 (263.7) | 13,658.4 (314.0) |
| 2.1 புடவையும் ஆடைகளும் | 7,116.3 (168.1) | 8,518.7 (195.9) |
| 2.2. பெற்றோலிய உற்பத்திகள் | 1,231.8 (29.1) | 1,076.9 (24.8) |
| 2.3. ஏனையவை | 2,819.4 (66.6) | 4,062.8 (93.4) |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 1,297.8 (30.6) | 1,277.1 (29.4) |
| 3.1. இரத்தினக்கற்கள் | 1,046.8 (24.7) | 1,014.3 (23.3) |
| 3.2. ஏனையவை (அ) | 251.0 (5.9) | 262.8 (6.0) |
| 4. ஏனையவை (இ) | 754.1 (17.8) | 762.5 (17.5) |
| மொத்த ஏற்றுமதிகள் | 23,111.6 (545.8) | 24,870.2 (571.8) |

மூலங்கள் : இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கைச் சுங்கம்.

(அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள்,
(ஆ) சீராக்கப்பட்டவை,
(இ) மீள் ஏற்றுமதிகள் உட்பட,
(ச) தற்காலிகமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989இன் முதலரைப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான மதிப்பிடப்பட்ட வருவாய்கள் ரூ. 248,700 இலட்சங்களாக (சிஎஉ 5,720 இலட்சம்) விளங்கி முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியின் வருவாய்களைவிட ரூபா நியதிகளில் 8 சதவீத அதிகரிப்பையும், சிஎஉ நியதிகளில் 5 சதவீத அதிகரிப்பையும் காட்டியது. இவ்வதிகரிப்பானது தெங்கு, புடவைகளும் ஆடைகளும் மற்றும் ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் என்பனவற்றிற்கான அதிகரித்த வருவாய்களில் பிரதிபலித்தது.

1989இன் முதலரைப்பகுதியில் தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 1988இன் இதேகாலப்பகுதியின் பெறுமதியான ரூ. 62,040 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,470 இலட்சம்) ரூ. 52,740 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,210 இலட்சம்) 15சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 17 சதவீதத்தால்) வீழ்ச்சியடைந்தது. இதற்கு தேயிலை ஏற்றுமதியின் அளவு 1,100 இலட்சம் கிலோக்கிராம்களிலிருந்து 900 இலட்சம் கிலோக்கிராம்களுக்கு 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை காரணமாக விளங்கியது. கிலோக்கிராமிற்கான சராசரி க. ஏ. பெ. விலை ரூ. 56.50 இலிருந்து ரூ. 58.40இற்கு 3 சதவீதத்தால் அதிகரித்தபோதிலும் சிஎஉ நியதிகளில் இவ்விலை கிலோகிராமிற்கு சிஎஉ 1.33 இலிருந்து கிலோகிராமிற்கு சிஎஉ 1.34ஆக சிறிதளவால் அதிகரித்தது.

இவ்விருகாலப் பகுதிகட்கிடையில் இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் ரூ. 19,830 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 470 இலட்சம்) ரூ. 17,760 இலட்சங்களுக்கு (சிஎஉ 410 இலட்சம்) 10 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 13 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இது முழுமையாக ஏற்றுமதி அளவு 580 இலட்சம் கிலோக்கிராம்களிலிருந்து 500 இலட்சம் கிலோக்கிராம்களுக்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தமையால் ஏற்பட்டதாகும். இதற்குமாறாக, சராசரி க. ஏ. பெ. விலை கிலோக்கிராம் ஒன்றிற்கு 1988இன் முதலரைப் பகுதியிலான ரூ. 34.08இலிருந்து (சிஎஉ 0.80), ரூ. 35.37இற்கு (சிஎஉ 0.81) 4 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 1 சதவீதம்) அதிகரித்தது.

தேயிலை, இறப்பர் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளுக்குமாறாக, தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ. 5,080 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 120 இலட்சம்), ரூ.11,170 இலட்சங்களுக்கு (சிஎஉ 260 இலட்சம்) 120 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 114 சதவீதத்தால்) அதிகரித்தன. இது ஏற்றுமதி அளவு 540 இலட்சம் காய்களிலிருந்து 2,130 இலட்சம் காய்களுக்கு 292 சதவீதத்தால் அதிகரித்ததன் விளைவால் ஏற்பட்டதாகும். இதேவேளையில், இவ்விருகாலப் பகுதிகட்கிடையில் காய் ஒன்றிற்கான ஏற்றுமதி விலை ரூ. 3.57இலிருந்து (சிஎஉ 0.084) ரூ. 3.30இற்கு (சிஎஉ 0.076) 8 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 10சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. தெங்கு உப உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்களும் ரூ. 3,150 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 70 இலட்சம்), ரூ. 4,150 இலட்சங்களுக்கு (சிஎஉ 160 இலட்சம்) 32 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 28 சதவீதம்) அதிகரித்தன.

1989இன் முதலரைப்பகுதியில் சிறுவேளாண்மை ஏற்றுமதித்துறையின் செயலாற்றமும் ஏமாற்றம் தருவதாகவே இருந்தது. 1989இன் முதலரைப் பகுதியில் இவ்வேற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 1988 முதலரைப்பகுதியின வருவாய்களான ரூ. 11,970 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 280 இலட்சம்) ரூ.10,060 இலட்சங்களுக்கு (சிஎஉ 230 இலட்சம்) 16 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 18 சதவீதம்) வீழ்ச்சியடைந்தன.

இவ்விருகாலப் பகுதிகட்கிடையில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ 111,670 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 2,640 இலட்சம்) ரூ. 136,580 இலட்சங்களுக்கு (சிஎஉ 3,140 இலட்சம்) 22 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 19 சதவீதம்) அதிகரித்தன. இவ்வேற்றுமதிகளில் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் சிஎஉ நியதிகளில் 17 சதவீதத்தினாலும் கைத்தொழில் உற்பத்திகளிருந்தான வருவாய்கள் 40 சதவீதத்தினாலும் அதிகரித்திருக்கையில் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989இன் முதலரைப்பகுதியில், கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1988இன் நேரிணையான காலப்பகுதியின் வருவாய்களான ரூ. 12,980 இலட்சங்களுடன் (சிஎஉ 310 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 12,770 இலட்சங்களாக (சிஎஉ 290 இலட்சம்) விளங்கி சிஎஉ நியதிகளில் 24 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. இதற்கு இரத்தினக்கற்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ. 10,470 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 250 இலட்சம்), ரூ.10,140 இலட்சங்களுக்கு (சிஎஉ 230 இலட்சம்) 3 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 6 சதவீதத்தால்) வீழ்ச்சியடைந்தமை முக்கிய காரணியாக விளங்கியது.

## இறக்குமதிகள்

1989இன் முதலரைப்பகுதியில் இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு 1988இன் நேரிணையான காலப்பகுதியின் செலவான ரூ. 349,060 இலட்சங்களுடன் (சிஎஉ 8,240 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 376,960 இலட்சங்களாக (சிஎஉ 8,670 இலட்சம்) விளங்கி சிஎஉ நியதிகளில் 5 சதவீத அதிகரிப்பை பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பானது முக்கியமாக நுகர்வு இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதியில் பிரதிபலித்தது.

நுகர்வுப் பொருட்களின் மொத்த இறக்குமதிச் செலவு ரூ. 86,460 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 2,040 இலட்சம்) ரூ.103,610 இலட்சங்களுக்கு (சிஎஉ 2,380 இலட்சம்) 20 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 17சதவீதம்) அதிகரித்தது. இது நுகர்வுப் பொருட்களின் இருவகைகளான உணவும் பானமும், ஏனைய நுகர்வுப் பொருட்கள் என்பனவற்றில் பிரதிபலிக்கப்பட்டது. உணவு, குடிபானம் இறக்குமதிகளில் எற்பட்ட அதிகரிப்பு ரூ. 52,210 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,230 இலட்சம்) ரூ. 63,000 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,450 இலட்சம்) 21 சதவீதமாக (சிஎஉ நியதிகளில் 17 சதவீதம்) விளங்குகையில் ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 34,250 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 810 இலட்சம்) ரூ. 40,620 இலட்சங்களுக்கு (சிஎஉ 930 இலட்சம்) 19 சதவீதமாக (சிஎஉ நியதிகளில் 15 சதவீதம்) விளங்கியது.

உணவு, குடிபானம் ஆகியவற்றின் இறக்குமதிகளில் சீனி இறக்குமதியின் பெறுமதி கடந்த ஆண்டின் நேரிணையான காலப்பகுதியின் பெறுமதியைவிட 60 சதவீதத்தால், (சிஎஉ நியதிகளில் 56 சதவீதம்) கணிசமாக அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு அளவிலும், விலையிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாக இருந்தன.

1989இன் முதல் ஆறுமாதங்களில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு கடந்த ஆண்டின் நேரிணையான காலப்பகுதியின் அளவான ரூ. 192 540 இலட்சங்களுடன் (சிஎஉ 4,550 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 208,690 இலட்சங்களாக (சிஎஉ 4,800 இலட்சம்) விளங்கி ரூபா நியதிகளில் 8 சதவீத அதிகரிப்பையும், சிஎஉ நியதிகளில் 6 சதவீத அதிகரிப்பையும் பதிவுசெய்தது. இவ்விறக்குமதிகளினுள் கோதுமைத்தானியத்தின் இறக்குமதிச் செலவு அதன் அளவிலும், விலையிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாக ரூ. 14,090 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 330 இலட்சம்) ரூ. 19,290 இலட்சங்களுக்கு (சிஎஉ 440 இலட்சம்) 37 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 33 சதவீதம்) கணிசமான அளவில் அதிகரித்தது. ஏனைய முக்கிய விடயங்களில் வளமாக்கி, பெற்றோலிய இறக்குமதிகளின் மொத்தச் செலவு கடந்த ஆண்டின் நேரிணையான காலப்பகுதியைவிட முறையே சிஎஉ நியதிகளில் 36 சதவீதத்தாலும், 2 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருக்கையில் புடவைகளின் இறக்குமதிச் செலவு 13 சதவீதத்தால் அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு காலப்பகுதிகட்கிடையில் முதலீட்டுப் பொருட்களின் இறக்கு மதிப் பெறுமதி ரூ. 64,770 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,530 இலட்சம்) ரூ. 58,790 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,350 இலட்சம்) 9 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 12 சதவீதத்தால்) வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியானது முக்கியமாக பொறி, கருவி இறக்குமதியில் பிரதிபலித்தது.

முடிவுப் பயன்பாட்டின்படியான இறக்குமதிகளின் பகுப்பாய்வு, இவ்விரு காலப்பகுதிகட்கிடையில் மொத்த இறக்குமதிகளில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 25 சதவீதத்திலிருந்து 27 சதவீதத்திற்கு அதிகரித்தவேளையில் முதலீட்டுப் பொருட்களின் பங்கு 19 சதவீதத்திலிருந்து 16 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையைக் காட்டுகின்றது. இடைநிலைப் பொருட்களின் பங்கு அதே மட்டத்திலான 55 சதவீதத்திலேயே தொடர்ந்தும் மாறுதிருந்தது.

## (இ) பணிகளும், மாற்றல்களும்

சென்மதி நிலுவை மோசமடைந்தமை பணிகள் கணக்கில் பிரதிபலிக்கப்பட்டதுடன் 1989இன் முதலரைப்பகுதியில் இக்கணக்குமீதான பற்றுக்குறை 1988இன் முதலரைப்பகுதியின் பற்றுக்குறையான சிஎஉ 460 இலட்சங்களிலிருந்து (ரூ. 19,600 இலட்சம்) சிஎஉ 710 இலட்சங்களுக்கு (ரூ. 30,890 இலட்சம்) அதிகரித்தது. 1989இன் முதலரைப்பகுதியில் பணிகளிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் அவ்வாறுன செலவு 4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. பணிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி பணிகள் கணக்கிலுள்ள எல்லா முக்கிய வகைகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. மீளாய்விற்குரிய காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகள் 37 சதவீதத்தால் பெருமளவில் வீழ்ச்சியடைந்தன. துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி என்பனவற்றிலிருந்தான பெறுகைகள் 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில், முதலீட்டு வருவாய் மீதான பெறுகைகள் 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இச்செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக வெளிநாட்டுப் படுகடன்மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட 7 சதவீத அதிகரிப்பாலும், வெளிநாட்டுப் பயணம்மீதான கொடுப்பனவுகளில் ஏற்பட்ட 13 சதவீத அதிகரிப்பினுலும் ஏற்பட்டது.

1989இன் முதல் ஆறு மாதங்களில், வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களின் பண அனுப்பல்களை உள்ளடக்கிய தனியார் மாற்றல் கணக்கின் மீதான மொத்தப் பெறுகைகள் 1988இன் நேரிணையான காலப் பகுதியின் சிஎஉ 1,270இலட்சங்களுடன் (ரூ. 53,890 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 1,240 இலட்சங்களாக (ரூ. 54,060 இலட்சம்) விளங்கின. தனியார் மாற்றல்கள் மீதான கொடுப்பனவுகள் சிஎஉ 150 இலட்சங்களாக (ரூ. 6,520 இலட்சம்) விளங்கி 1988இன் முதல்ரைப்பகுதியிலான கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் 9 சதவீத அதிகரிப்பைக் காட்டின. தேறிய அடிப்படையில், 1989இன் முதலரைப்பகுதியில் தனியார் மாற்றல்கள் சிஎஉ 1,090 இலட்சங்களுக்கு (ரூ. 47,540 இலட்சம்) 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. எனினும் 1989இன் முதலரைப்பகுதியில் அலுவல்சார் மாற்றல்கள், 1988இன் நேரிணையான காலப்பகுதியின் அளவான சிஎஉ 610 இலட்சங்களிலிருந்து (ரூ. 25,890 இலட்சம்) சிஎஉ 710 இலட்சங்களுக்கு (ரூ. 30,740 இலட்சம்) 16 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1989இன் முதலரைப்பகுதியில் தனியார் மற்றும் அலுவல்சார் மாற்றல்கள் இரண்டிலுமிருந்தான மொத்த தேறிய மாற்றல்கள் 3 சதவீதத்தால் அதிகரித்தன.

## (ஈ) மூலதனப் பாய்ச்சல்கள்

1989இன் முதலரைப்பகுதியில் நாணயமல்லா மூலதனத்தின் மொத்த உட்பாய்ச்சல், வெளிநாட்டு தனியார் நேரடி முதலீட்டில் ஏற்பட்ட 58 சதவீத வீழ்ச்சியாலும், தனியார்துறையில் (அரச கூட்டுத்தாபனங்கள் உட்பட) நீண்டகால கடன்களின் பாவனையில் ஏற்பட்ட 14 சதவீத வீழ்ச்சியாலும், அலுவல்சார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்களின் பகிர்ந்தளிப்புக்களில் ஏற்பட்ட 25 சதவீத வீழ்ச்சியாலும், அரசால் தீர்ப்பனவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கடன்களில் ஏற்பட்ட 8 சதவீத அதிகரிப்பாலும் 40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

1989இன் முதலரைப்பகுதியில் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் 1988இன் முதல்ரைப்பகுதியிலான சிஎஉ 190 இலட்சங்களிலிருந்து சிஎஉ 80 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தன. இக்காலப்பகுதியில் தனியார்துறையால் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால வெளிநாட்டுக் கடன்களின் பாவனை 1988இன் முதலரைப்பகுதியின் சிஎஉ 150 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில்சிஎஉ 120 இலட்சங்களாக விளங்கியது. எனினும், இவ்விரு காலப்பகுதிகட்கிடையில் குறுங்காலக் கடன்களின் பாவனை சிஎஉ 50 இலட்சங்களிலிருந்து சிஎஉ 200 இலட்சங்களுக்கு அதிகரித்தது. இது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் காரணமாக அதிகரித்த வர்த்தகக் கொடுகடன் பாவனையில் பிரதிபலிக்கப்பட்டது.

1989இன் முதலரைப்பகுதியில் அரசிற்கான மொத்த வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புக்கள் 1988இன் முதலரைப்பகுதியிலான சிஎஉ 1,370 இலட்சங்களிலிருந்து (ரூ. 58,130 இலட்சம்), சிஎஉ 1,030 இலட்சங்களுக்கு (ரூ. 44,760 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன. மறுபக்கத்தில், இவ்விரு காலப்பகுதிகட்கிடையில் வெளிநாட்டுக் கடன்களின் தீர்ப்பனவுகள் சிஎஉ 530 இலட்சங்களிலிருந்து (ரூ. 22,420 இலட்சம்) சிஎஉ 570 இலட்சங்களுக்கு (ரூ. 24,950 இலட்சம்) அதிகரித்தன.

### (உ) திரண்ட நிலுவையும், வெளிநாட்டுச் சொத்துக்களும்

1989இன் முதலரைப்பகுதியில் மொத்தத் தேறிய நாணயமல்லா மூலதனப் பாய்ச்சல் விரிவடைந்த நடைமுறைக் கணக்கின் பற்றுக்குறையில் 34 சதவீதத்தினை மட்டுமே நிதியிடப் போதுமானதாக இருந்தமையின் காரணமாக மொத்தப் பற்றுக்குறையான சிஎஉ 1,210 இலட்சங்களை (ரூ. 58,480 இலட்சம்) வெளிநாட்டுச் சொத்துக்களைப் பயன்படுத்துவதன்மூலம் நிதியிட வேண்டியிருந்தது.

1989 யூன் இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1988இன் இறுதியிலிருந்த சிஎஉ 4,150 இலட்சங்களுடன் (ரூ. 184,400 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 3,720 இலட்சங்களாக (ரூ. 160,020 இலட்சம்) விளங்கியது. 1989 யூன் இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் 1989இன் இரண்டாவது அரைப்பகுதிக்கெனத் திட்டமிடப்பட்ட இறக்குமதிகளில் 2.1 மாதங்களுக்கு மட்டுமே நிதியிடப் போதுமானதாக இருந்தது.

### (ஊ) படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

1989இன் முதலரைப்பகுதியில் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும், வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் சிஎஉ 1,840 இலட்சங்களுக்கு (ரூ. 80,180 இலட்சம்) 2 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்விருகாலப்பகுதிகட்கிடையில் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் சிஎஉ 1,170 இலட்சங்களிலிருந்து (ரூ. 49,010 இலட்சம்) சிஎஉ 1,130 இலட்சங்களுக்கு (ரூ. 49,430 இலட்சம்) வீழ்ச்சியடைந்திருக்கையில் வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 640 இலட்சங்களிலிருந்து (ரூ. 26,930 இலட்சம்) சிஎஉ 710 இலட்சங்களுக்கு (ரூ. 30,750



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6.3

இறக்குமதிகளின் மீதான செலவினம்

| வகை | சனவரி - யூன் (ரூ. பத்து இலட்சம்) | | சனவரி - யூன் (சிஎஉ பத்து இலட்சம்) | |
|---|---|---|---|---|
| | 1988 | 1989(அ) | 1988 | 1989(அ) |
| 1. நுகர்வுப் பொருட்கள் .. | 8,645.6 | 10,361.4 | 204.2 | 238.2 |
| 1.1. உணவும், குடிவகையும் .. | 5,221.0 | 6,299.6 | 123.3 | 144.8 |
| 1.1.1. அரிசி .. | 1,296.5 | 1,300.5 | 30.6 | 29.9 |
| 1.1.2. கோதுமை .. | 155.7 | 174.6 | 3.7 | 4.0 |
| 1.1.3. சீனி | 1,252.3 | 2,004.9 | 29.6 | 46.1 |
| 1.2. ஏனையவை .. | 3,424.6 | 4,061.8 | 80.9 | 93.4 |
| 2. நடுத்தரப் பொருட்கள் .. | 19,254.0 | 20,868.5 | 454.7 | 479.8 |
| 2.1. பெற்றோலியம் .. | 3,758.4 | 3,786.5 | 88.8 | 87.1 |
| 2.2. வளமாக்கி .. | 995.7 | 650.4 | 23.5 | 15.0 |
| 2.3 இரசாயனம் .. | 893.2 | 870.8 | 21.1 | 20.0 |
| 2.4. கோதுமை | 1,408.8 | 1,928.9 | 33.3 | 44.3 |
| 2.5. புடவையும், துணி வகைகளும் .. | 4,143.8 | 4,826.9 | 97.9 | 111.0 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் .. | 6,476.8 | 5,878.9 | 153.0 | 135.2 |
| 3.1. பொறிகளும், கருவிகளும் .. | 3,828.5 | 2,866.8 | 90.4 | 65.9 |
| 3.2. போக்குவரத்துக் கருவிகள் | 772.3 | 960.1 | 18.2 | 22.1 |
| 3.3. கட்டடப் பொருட்கள் .. | 470.0 | 428.4 | 11.1 | 9.8 |
| 4. பகுக்கப்படாதவை .. | 529.2 | 587.3 | 12.5 | 13.5 |
| மொத்த இறக்குமதிகள் .. | 34,905.6 | 37,696.1 | 824.3 | 866.7 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 6.4.

படுகடன் பணிக்கொடுப்பனவுகள் — 1988, 1989இன் முதலரைப்பகுதி

| விடயம் | சிஎஉ பத்து இலட்சம் | | ரூபா பத்து இலட்சம் | |
|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1988 | 1989 |
| அ. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 180.7 | 184.1 | 7,594.0 | 8,017.7 |
| அ.1. கடன் தீர்ப்பனவு | 117.0 | 113.3 | 4,901.3 | 4,942.9 |
| ப. நா. நிதியத்திற்கு | 32.8 | 25.5 | 1,342.3 | 1,113.5 |
| ஏனையவற்றிற்கு | 84.2 | 87.8 | 3,559.0 | 3,829.4 |
| அ.2. வட்டிக் கொடுப்பனவுகள் | 63.7 | 70.8 | 2,692.7 | 3,074.8 |
| ப. நா. நிதியத்திற்கு | 8.3 | 9.4 | 333.8 | 404.5 |
| ஏனையவற்றிற்கு | 55.4 | 61.4 | 2,358.9 | 2,670.3 |
| ஆ. பொருட்கள், பணிகளின் ஏற்றுமதிகள் | 697.3 | 648.6 | 29,507.0 | 28,227.7 |
| இ. பொருட்கள், பணிகளின் பெறுகைகளும், தனியார் மாற்றல்களும் | 824.6 | 772.9 | 34,896.0 | 33,633.7 |
| ஈ. முழுமொத்த படுகடன் பணிவிகிதம் | | | | |
| ஆஇன் சதவீதமாக அ | 25.9 | 28.4 | 25.7 | 28.4 |
| இஇன் சதவீதமாக அ | 21.9 | 23.8 | 21.8 | 23.8 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சம்) அதிகரித்தன. 1989இன் முதலரைப்பகுதியில் பன்னுட்டு நாணயநிதிக் கடன்களின் பேரிலான மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1988இன் முதலரைப்பகுதியின் சிஎஉ 410 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் சிஎஉ 350 இலட்சங்களாக விளங்கின. இதேவேளை 1989இன் முதலரைப்பகுதியில் பொருட்கள் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை, படுகடன் பணிவிகிதத்தை 1988இன் இதேகாலப்பகுதியின் விகிதமான 26 சதவீதத்திலிருந்து 28 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு ஏதுவாக விளங்கியது. இவ்விரு காலப்பகுதிகட்கிடையில் பொருட்கள் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான பெறுகைகளினதும், தனியார் மாற்றல்களினதும் விகிதமாக மொத்தப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 22 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்கு அதிகரித்தன.

## 7. அரச நிதி

தற்காலிகத் தரவுகளின்படி 1989இன் முதலரைப்பகுதியில் அரசின் அரசிறை ரூ. 236,390 இலட்சங்களாக விளங்குகையில் நடைமுறைச் செலவினம் ரூ. 244,110 இலட்சங்களாக விளங்கியது. இதன்படி இக்காலப்பகுதியில் வரவு-செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு முன்னைய ஆண்டின் ரூ.3,030 இலட்சங்கள் கொண்ட பற்றுக் குறைக்கு மாறாக ரூ. 7,720 இலட்சங்கள் கொண்ட பற்றுக்குறையை பதிவுசெய்தது. 1989இன் முதலரைப்பகுதியில் மதிப்பிடப்பட்ட அரசிறையும், கொடையும் ரூ. 272,260 இலட்சங்களாக விளங்கி 22 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்திருக்கையில், தேறிய கடன் வழங்கலை உள்ளடக்கிய மொத்த செலவினம் ரூ. 371,310 இலட்சங்களாக விளங்கி கடந்த ஆண்டின் செலவினத்தைவிட 28 சதவீத அதிகரிப்பை பதிவு செய்தது. இவ்வாறு மொத்த வரவு-செலவுத் திட்டப் பற்றுக்குறை (கொடைகளின் பின்) 1988இன் நேரிணையான காலப்பகுதியின் ரூ. 66,940 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 99,050 இலட்சங்களாக விளங்கியது. இதனால் 1989இன் முதலரைப்பகுதியில் இறைச் செயலாற்றம் முன்னைய ஆண்டின் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மேலும் மோசமடைந்தது.

அட்டவணை 7.1.

வரவு -செலவுத்திட்ட செயலாக்கத்தின் பகுப்பாய்வு

ரூ. ப. இலட்சம்

| | 1988 முதலரைப்பகுதி தற்காலிகம் | 1989 முதலரைப்பகுதி மதிப்பிடப்பட்டது |
|---|---|---|
| அரசிறை | 19,772 | 23,639 |
| செலவினம் | — 29,055 | — 37,131 |
| மீண்டெழும் | — 20,075 | — 24,411 |
| மூலதனமும், தேறிய கடன் வழங்கலும் | — 8,980 | — 12,720 |
| கொடைகளின் முன்னுன பற்றுக்குறை | — 9,283 | — 13,492 |
| நிதியிடல் | 9,283 | 13,492 |
| கொடைகள் | 2,589 | 3,587 |
| கொடைகளின் பின் பற்றுக்குறை | — 6,694 | — 9,905 |
| நிதியிடல் | 6,694 | 9,905 |
| வெளிநாட்டு | 3,571 | 1,981 |
| உள்நாட்டு | 3,123 | 7,924 |
| வங்கியல்லாத | 3,435 | 6,303 |
| வங்கி | — 312 | 1,621 |

மூலங்கள் : திறைசேரி, இலங்கை மத்திய வங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989இன் முதலரைப்பகுதியில், அரசின் அரசிறை ரூ. 236,390இலட்சங்களாக மதிப்பிடப் பட்டுள்ளதுடன் 1988இன் இதே காலப்பகுதியிலான அரசிறை சேகரிப்புக்களைவிட 20 சதவீதம் அதிகரித்து விளங்கியது. 1989இன் முதலரைப்பகுதியில் எல்லா முக்கிய மூலங்களிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் அதே மூலங்களிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்களைவிட அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தது. இதற்கு 1989 மாச்சில் அறிமுகப்படுத்தப்பட்ட மேலதிக வரி வழிமுறைகள் முக்கிய காரணிகளாக விளங்கின. மதிப்பிடப்பட்ட வரி அரசிறை ரூ. 191,010 இலட்சங்களாக விளங்கி கிட்டத்தட்ட 20 சதவீதம் அதிகரித்திருக்கையில், வரியல்லா அரசிறை ரூ. 45,380 இலட்சங்களாக விளங்கி 18 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. 1989இன முதலரைப்பகுதியில் பொருட்கள், பணிகள் மீதான வரிகளிலிருந்தான மொத்த சேகரிப்புக்கள் வரி அரசிறையில் 46 சதவீதத்திற்கு வகை கூறுகையில் வெளிநாட்டு வர்த்தகம் சார்ந்த வரிகளிலிருந்தான அரசிறை 35 சதவீதத்திற்கு வகைகூறியது. இதே வேளையில் மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள் ரூ. 20,000 இலட்சங்களாக விளங்கி 21 சதவீத அதிகரிப்பைக் காட்டின. அத்துடன் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களின் உடைமைகள் மீதான வரி ரூ. 8,880 இலட்சங்கள் கொண்ட மேலதிக அரசிறையை வழங்கியது.

அட்டவணை 7.2

அரசிறை

ரூ. ப. இலட்சம்.

| | 1988 சன-யூன் தற்காலிகம் | 1989 சன-யூன் மதிப்பிடப்பட்டது |
|---|---|---|
| 1. வரி அரசிறை .. .. | 15,931 | 19,101 |
| 1.1. கூட்டானதும் தனிப்பட்டதுமான வருவாய்களின் வரிகள் .. | 2,179 | 2,475 |
| 1.2. பொருட்களினதும், பணிகளினதும் வரிகள் .. .. | | |
| மொத்த விற்பனை வரிகள் | 5,262 | 6,187 |
| கலால் தீர்வைகள் .. | 2,009 | 2,601 |
| 1.3. வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் | | |
| இறக்குமதி .. .. | 5,250 | 5,950 |
| ஏற்றுமதி .. .. | 1,052 | 812 |
| 1.4. ஏனையவை .. .. | 179 | 1,076 |
| 2. வரியல்லா இறை .. .. | 3,841 | 4,538 |
| 2.1. மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள் | 1,650 | 2,000 |
| 2.2. வர்த்தக முயற்சிகளின் இலாபங்கள் | 671 | 692 |
| 2.3. வட்டி .. .. | 570 | 555 |
| 2.4. ஏனையவை .. .. | 950 | 1,291 |
| 3. மொத்த அரசிறை .. .. | 19,772 | 23,639 |

மூலங்கள்: திறைசேரி,
இலங்கை மத்திய வங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989இன் முதலரைப்பகுதியில் மொத்த அரச செலவினம் 1988இன் முதலரைப்பகுதியிலான ரூ. 290,550 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 371,310 இலட்சங்களாக விளங்கியது. இவ்வாறு 1989இன் முதலரைப் பகுதிக்கான மதிப்பிடப்பட்ட செலவினம் 1989இற்கு திட்டமிடப்பட்ட மொத்தச்செலவினத்தில் 40 சதவீதத்திற்கு வகைகூறியது.

மீளாய்விற்குரிய காலப்பகுதியில் செலவினம் ரூ. 244,110 இலட்சங்கள் கொண்ட நடைமுறைச் செலவினத்தையும் ரூ. 127,200 இலட்சங்களைக் கொண்ட மூலதனச் செலவினத்தையும் அரசின் தேறிய கடன் வழங்கலையும் உள்ளடக்கியுள்ளது. தனியார் ஊதியம் மீதான அதிகரித்த செலவாலும், அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளாலும் நடைமுறைச் செலவினம் 22 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, மூலதனச் செலவினமும், கடன் வழங்கலும் 42 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

அட்டவணை 7.3.

வெளிநின்ற பொதுப்படுகடனின் உள்ளடக்கம்

ரூ. பத்து இலட்சம்

| விடயம் | 1988 திசெம். இறுதியில் | 1989 யூன் இறுதியில் | மாற்றம் |
|---|---|---|---|
| 1. உள்நாட்டுப்படுகடன் | 98,594.6 | 107,755.6 | 9,161.0 |
| 1.1. நடுத்தர நீண்டகால | 49,959.8 | 52,001.1 | 2,041.3 |
| 1.1.1. ரூபாக் கடன்கள் | 49,797.2 | 51,835.1 | 2,037.9 |
| 1.1.2. நிர்வாகம் சார்ந்த கடன் பெறல் | 162.6 | 166.0 | 3.4 |
| 1.2. குறுகியகால | 48,634.8 | 55,754.5 | 7,119.7 |
| 1.2.1. திறைசேரி உண்டியல்கள் | 43,700.0 | 50,322.4 | 6,622.4 |
| 1.2.2. இலங்கை மத்திய வங்கி முற்பணங்கள் | 4,926.0 | 5,423.5 | 497.5 |
| 1.2.3. வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | 8.8 | 8.6 | — 0.2 |
| 2. வெளிநாட்டுப் படுகடன் | 125,588.3 | 125,641.4 | 53.1 |
| 2.1. செயற்றிட்டக் கடன்கள் | 85,643.2 | 87,700.4 | 2,057.2 |
| 2.2. செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 39,945.1 | 37,941.0 | — 2,004.1 |
| 2.2.1. பண்டக் கடன்கள் | 35,919.3 | 35,006.0 | — 913.3 |
| 2.2.2. ஏனைய கடன்கள் | 4,025.8 | 2,935.0 | — 1,090.8 |
| மொத்த வெளிநின்ற படுகடன் | 224,182.9 | 233,397.0 | 9,214.1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989இன் முதலரைப்பகுதியில் மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றுக் குறை (கொடைகளின் பின்) ரூ. 99,050 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியின் பற்றுக்குறையைவிட 48 சதவீதம் அதிகரித்திருந்தது. பற்றுக்குறையில் ஏற்பட்ட விரிவிற்கு மீளாய்விற்குரிய காலப்பகுதியில் நடைமுறைச் செலவினத்தில் ஏற்பட்ட கூடிய அதிகரிப்பு காரண மாக விளங்கியது.

பற்றுக் குறையை நிதியிடலில் ரூ. 19,810 இலட்சங்கள் அல்லது மதிப்பிடப்பட்ட பற்றுக்குறையின் 28 சதவீதம் வெளிநாட்டுக் கடன் கள் மூலம் பெறப்பட்டது. எனினும் 1989இன் முதலரைப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் 1989இற்கான வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் 17 சதவீதத்திற்கு மட்டும் வகைகூறியது.

உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட மூலவளங்கள் ரூ. 79,240 இலட்சங்களாக விளங்கின. இதில் வங்கியல்லா மூலங்கள் ரூ. 63,030 இலட்சங்களை வழங்கின. பின்னையதில் ரூ. 20,380 இலட்சங்கள் ரூபாக் கடன்கள் மூலமாகவும், ரூ. 42,650 இலட்சங்கள் திறைசேரி உண்டியல் கள் மூலமாகவும் திரட்டப்பட்டது.

1989இன் முதலரைப்பகுதியில் வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறையை நிதியிடுவதற்காக வங்கித் தொழில் முறையிலிருந்து பயன்படுத்தப்பட்ட மொத்த மூலவளங்கள் ரூ. 16,210 இலட்சங்களாக விளங்கியது. இதில் ரூ. 4,980 இலட்சங்கள் மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

**அரசபடுகடன்**

1989 யூன் இறுதியில் மதிப்பிடப்பட்ட வெளிநின்ற அரசபடுகடன் ரூ. 2,333,970 இலட்சங்களாக விளங்கியது. இது 1988இன் இறுதியில் வெளி நின்ற படுகடனை ரூ. 2,241,830 இலட்சங்களைவிட ரூ. 92,140 இலட்சங்கள் அல்லது 4 சதவீதம் அதிகமானதாகும். 1988இன் இறுதியிலான நேரிணையான மட்டங்களைவிட வெளிநின்ற உள்நாட்டுப்படுகடன் ரூ. 1,077,560 இலட்சங் களாக விளங்கி 9 சதவீதம் அதிகரித்திருக்கையில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ. 1,256,410 இலட்சங்களாக விளங்கி மிகச்சிறிய ஒரு அதிகரிப்பை மட்டுமே பதிவுசெய்தது.

1989 யூன் இறுதியில் உள்நாட்டுப் படுகடன் பேரிலான வெளி நின்ற பொறுப்பு மொத்தப்படுகடனின் 46 சதவீதத்திற்கு வகைகூறியது. உள் நாட்டுப் படுகடனில் நடுத்தர நீண்டகாலப் படுகடன் ரூ. 520,010 இலட்சங் களாக விளங்குகையில் குறுங்காலப் படுகடன் ரூ. 557,550 இலட்சங்களாக விளங்கியது. இவ்வாறு 1989இன் முதல் ஆறுமாதங்களில் நடுத்தர நீண்ட காலப் படுகடன் 4 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் குறுங்கால படுகடன் 15 சதவீதத்தால் அதிகரித்தது.

மொத்த வெளிநாட்டுப் படுகடன் ரூ. 877,000 இலட்சங்கள் அல்லது 70 சதவீதங்கொண்ட செயற்றிட்டக் கடன்களையும் ரூ. 350,060 இலட்சங்கள் கொண்ட பண்டக் கடன்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ்வாறு 1989இன் முதலரைப்பகுதியில் வெளிநின்ற செயற்றிட்டக் கடன்கள் 2 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் பண்டக்கடன்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்புக் கள் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பணமும் கொடுகடனும்

## (அ) பணநிரம்பல்

1989இன் முதலரைப்பகுதியில் பணநிரம்பலின் வளர்ச்சி வீதத்தில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சித்தன்மையே காணப்பட்டது. 1988 இறுதியில் 29 சதவீதமாக விளங்கிய பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தையும், கேள்வி வைப்புக்களையும் கொண்ட குறுகிய பணநிரம்பலின் (M1)ஆண்டு வளர்ச்சி வீதம் 1989 யூன் இறுதியில் 15 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. இதே போக்கினைத் தொடர்ந்து M1இனையும் வர்த்தக வங்கிகளிடமுள்ள பொதுமக்களின் தவணை, சேமிப்பு வைப்புக்களையும் கொண்ட விரிந்த பணநிரம்பல் (M2) இதே காலப்பகுதியில் 16 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வங்கித் தொழில்முறையின் வெளிநாட்டுச் சொத்துக்களில் (தேறிய) ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியும், உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தின் மிதமான போக்குமே 1989இன் முதலரைப்பகுதியின் நாணய வளர்ச்சி வீதத்தின் வீழ்ச்சித் தன்மைக்கான முக்கிய ஏதுக்காரணிகளாகும்.

1989இன் முதலரைப்பகுதியில் குறுகிய பணநிரம்பலின் இரண்டு கூறுகளும் 1988 இறுதியில் காணப்பட்ட அவற்றின் வழமைக்கு மாறுன உயர்ந்த மட்டங்களிலிருந்து வீழ்ச்சியடைந்தன. மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியில் நாணயக்கூறு ரூ. 1,200 இலட்சத்தால் அல்லது 0.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் கேள்வி வைப்புக்கூறு ரூ. 2,220 இலட்சத்தால் அல்லது 1.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மாறுக இவ்விரு கூறுகளும் 1988இன் நேரிணையான காலப்பகுதியில் முறையே ரூ. 20,520 இலட்சம் அல்லது 15.2 சதவீதமும் ரூ. 6,560 இலட்சம் அல்லது 5.7 சதவீதமும் கொண்ட அதிகரிப்புக்களை பதிவுசெய்தன. எனவே முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூ. 27,080 இலட்சம் அல்லது 10.8 சதவீத அதிகரிப்புக்கு மாறுக 1989இன் முதலரைப்பகுதியின் குறுகிய பணநிரம்பல் ரூ. 3,420 இலட்சத்தால் அல்லது 1.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளை வர்த்தக வங்கிகளிடமுள்ள பொதுமக்களின் தவணை, சேமிப்பு வைப்புகள் (போலி நாணயம்) மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியில் ரூ. 21,130 இலட்சத்தால் அல்லது 5.9 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னைய ஆண்டின் நேரிணையான அதிகரிப்பு ரூ. 20,740 இலட்சம் அல்லது 6.2 சதவீதமாகும். இதனைத்தொடர்ந்து 1989இன் முதல் ஆறு மாதங்களில் விரிந்த பணநிரம்பல் (M2) 1988இன் நேரிணையான காலப்பகுதியின் அதிகளவு அதிகரிப்பான ரூ. 47,830 இலட்சம் அல்லது 8.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 17,710 இலட்சத்தால் அல்லது 2.6 சதவீதத்தால் அதிகரித்தது. 1988 இறுதியில் 57 சதவீதத்திற்கு உயர்வடைந்த M1இலுள்ள நாணயக் கூறின் பங்கு 1989இன் முதலரைப்பகுதியிலும் ஏறத்தாள அதே மட்டத்திலேயே காணப்பட்டதுடன் இதற்கு நாட்டின் தொடர்ச்சியான அமைதியின்மையின் விளைவாக திரவப் பணத்திற்கான உயர்ந்த விருப்பத்தேர்வே காரணமாகும்.

1989இன் முதல் ஆறு மாதங்களில் தவணை சேமிப்பு வைப்புக்களின் வளர்ச்சிக்கு ஏனைய தனியார்துறைத் தொகுதிகளின் வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 25,510 இலட்ச அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இதேவேளை கூட்டுறவு நிறுவனங்களினுல் வைப்பிலிடப்பட்ட இவ்வகை வைப்புக்கள் ரூ. 1,260 இலட்சத்தால் அதிகரித்த வேளையில் அரச கூட்டுத்தாபனங்களிடமுள்ளவை ரூ. 5,630 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தன.

1988இற்கான ஒப்பிடத்தக்க தரவுகளுடனும் 1989 யூனுடன் முடியும் 12 மாத காலப்பகுதிக்கான மாற்றங்களுடனும் 1989இன் முதல் ஆறுமாத காலப்பகுதியில் நாணயக் கூட்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் இம்மாற்றங்களை தீர்மானிக்கும் காரணிகளையும் அட்டவணை 8.1 தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 8.1.

பணக்கூட்டுக்களில் ஏற்பட்ட மாற்றங்களும், ஏதுக்காரணிகளும்

(ரூபா பத்து இலட்சம்)

| | திசம்பர் 1987/யூன் 1983 | | திசம்பர் 1988/யூன் 1989 | | யூன் 1988/யூன் 1989 | |
|---|---|---|---|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | % மாற்றம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | % மாற்றம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | % மாற்றம் |
| **பணக்கூட்டுக்கள்** | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயத்தில் மாற்றம் | + 2,052.0 | + 15.2 | — 120.0 | — 0.6 | + 2,820.2 | + 18.1 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் .. | + 656.4 | + 5.7 | — 222.2 | + 1.6 | + 1,425.2 | + 11.6 |
| M1இல் ஏற்பட்ட தேறிய மாற்றம் .. | + 2,708.4 | + 10.8 | — 342.2 | — 1.1 | + 4,245.4 | + 15.3 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | + 2,074.4 | + 6.2 | + 2,113.4 | + 5.9 | + 2,353.8 | + 6.7 |
| 3.1. கூட்டுறவு நிறுவனங்கள் .. | — 13.9 | — 1.8 | + 126.2 | + 17.0 | + 112.6 | + 14.9 |
| 3.2. அரச கூட்டுத்தாபனங்கள் .. | + 684.6 | + 14.1 | — 563.4 | — 11.1 | — 1,006.0 | — 18.1 |
| 3.3. ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் | + 1,403.7 | + 5.1 | + 2,550.6 | + 8.6 | + 3,247.2 | + 11.2 |
| M2இல் ஏற்பட்ட தேறிய மாற்றம் .. | + 4,782.8 | + 8.2 | + 1,771.2 | + 2.6 | + 6,599.2 | + 10.5 |
| **ஏதுக்காரணிகள்** | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கம். .. | + 7,603.3 | + 10.1 | + 4,812.6 | + 5.0 | + 18,510.8 | + 22.3 |
| 1.1. அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் | + 2,322.8 | + 8.6 | + 1,544.6 | + 4.3 | + 8,238.4 | + 28.0 |
| 1.1.1. அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன். | + 1,516.0 | + 4.8 | — 1,902.1 | — 4.3 | + 9,373.6 | + 28.4 |
| மத்திய வங்கியால் .. | + 1,486.1 | + 5.9 | + 869.6 | + 2.4 | + 9,665.4 | + 35.0 |
| வர்த்தக வங்கிகளினால் .. | + 29.9 | + 0.6 | — 2,771.7 | — 35.2 | — 291.8 | — 5.4 |
| 1.1.2. அரசின் வைப்புக்களும், காசு நிலுவைகளும் .. | + 806.8 | + 18.1 | + 3,446.7 | + 41.8 | — 1,135.2 | — 31.0 |
| 1.2. தனியார்துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் .. | + 5,280.5 | + 10.9 | + 3,268.0 | + 5.4 | + 10,272.4 | + 19.1 |
| 1.2.1. கூட்டுறவு நிறுவனங்கட்கு .. | + 565.6 | + 50.3 | + 101.3 | + 7.7 | — 269.1 | — 15.9 |
| 1.2.2. அரச கூட்டுத்தாபனங்கட்கு .. | + 1,831.9 | + 24.9 | + 2,762.3 | + 25.6 | + 4,351.3 | + 47.3 |
| 1.2.3. ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்களுக்கு .. .. | + 2,883.0 | + 7.2 | + 404.4 | + 0.8 | + 6,190.2 | + 14.4 |
| 2. வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய) .. .. | — 1,482.6 | — 16.0 | — 5,456.2 | — 77.3 | — 6,206.6 | — 79.5 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) .. .. | — 1,337.8 | — 5.0 | + 2,414.8 | — 6.7 | — 5,705.0 | — 20.5 |
| 3.1. மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) .. .. | — 1,014.5 | | + 2,261.9 | | + 760.4 | |
| 3.2. வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) .. .. | — 2,164.9 | | — 320.4 | | — 6,677.8 | |
| 3.3. இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் .. .. | + 187.4 | | + 473.3 | | + 212.4 | |
| M2இல் ஏற்பட்ட தேறிய மாற்றம் .. | + 4,782.8 | + 8.2 | + 1,771.2 | + 2.6 | + 6,599.2 | + 10.5 |

குறிப்பு: குறிகள் M2 மீதான தாக்கத்தைக் காட்டுகின்றன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கத்தாக்கத்தினை ஏற்படுத்தும் (தேறிய) வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களின் தொடர்ச்சியான வீழ்ச்சி காணப்படும் பின்னணியில் உள்நாட்டுக் கொடுகடனின் விரிவாக்கமும், ஏனைய விடயங்களின் (தேறிய) விரிவாக்க மாற்றமுமே 1989இன் முதலரைப்பகுதியில் விரிந்த பண நிரம்பலின் வளர்ச்சிக்கு பொறுப்பான காரணிகளாகும். எனினும் 1988இன் முதலரைப் பகுதியின் ரூ. 76,030 இலட்சம் அல்லது 10.1 சதவீதமான குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989இன் முதலரைப்பகுதியில் உள்நாட்டுக் கொடு கடன் ரூ. 48,130 இலட்சம் அல்லது 5.0 சதவீதத்தால் உயர்வடைந்தது. மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியில் அரச, தனியார்துறை ஆகிய இரு துறை களும் குறைந்தளவான வங்கிக் கொடுகடனையே பயன்படுத்தின.

1989இன் முதலரைப்பகுதியில், வங்கித் தொழில் முறையிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடன் முன்னைய ஆண்டின் ஒப்பிடத்தக்க காலப் பகுதியின் ரூ. 23,230 இலட்சம் அல்லது 8.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகை யில் ரூ. 15,450 இலட்சத்தால் அல்லது 4.3 சதவீதத்தால் உயர்வடைந்தது. 1988இன் முதல் ஆறு மாதங்களில் ரூ. 14,860 இலட்சத்தால் அல்லது 5.9 சதவீதத்தால் அதிகரித்த மத்திய வங்கியிலிருந்து அரசிற்கான மொத்தக் கொடு கடன் 1989இன் ஒப்பிடத்தக்க காலப்பகுதியில் ரூ. 8,700 இலட்சம் அல்லது 2.4 சதவீதம் கொண்டமிகவும் சிறிதளவான அதிகரிப்பினை பதிவுசெய்தது. இதேவேளை வர்த்தக வங்கிகளிலிருந்து அரசிற்கான மொத்தக் கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ. 300 இலட்சம் கொண்ட சிறு அதிகரிப்பிற்கு மாறாக 1989இன் முதலரைப்பகுதியில் ரூ. 27,720 இலட்சத்தால் குறிப்பிடத்தக்கள விற்கு வீழ்ச்சியுற்றது. எனினும் அரச வைப்புக்களினதும் காசு நிலுவைகளின தும் ரூ. 34,470 இலட்சங்கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பணநிரம்பல் மீதான அரசிற்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் வீழ்ச்சியினை எதிரீடு செய்தது. பொதுமக்கள் மத்தியில் திறைசேரி உண்டியல்களை பிரபல்யப் படுத்தும் கூட்டு முயற்சிக்கு அமைய வங்கியல்லாத்துறையிடமுள்ள திறைசேரி வைப்புக்களின் பங்கில் ஏற்பட்ட அதிகரிப்பு மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியில் மத்திய வங்கியிலிருந்தான அரசின் கடன்பாட்டுத் தேவைகளை குறிப்பிடத்தக்க அளவுக்கு குறைப்பதற்கு உதவியது.

1989இன் முதலரைப்பகுதியில் தனியார்துறைக்கான மொத்தக் கொடு கடன் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூ. 52,810 இலட்சம் அல்லது 10.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 32,680 இலட்சத்தால் அல்லது 5.4 சதவீதத்தால் அதிகரித்தது. தனியார்துறையினுள் அரச கூட்டுத்தாபனங் கள் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூ. 18,320 இலட்சம் அல்லது 24.9 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் ரூ. 27,620 இலட்சம் அல்லது 25.6 சத வீதங்கொண்ட அதிகூடிய அதிகரிப்பைப் பதிவுசெய்தன. இவ்வதிகரிப்பின் பெரும்பகுதிக்கு 1989இல் உணவு இறக்குமதிகளின் செயற்பாடுகள் உணவுக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு மாற்றப் பட்டமையால் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகளவு அதிகரிப்பு பொறுப்பாகும். குறிப்பிடத்தக்க அளவுகளில் வங்கிக் கொடுகடன்களைப் பயன்படுத்திய ஏனைய கூட்டுத்தாபனங்களாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, இலங்கை உருக்குக் கூட்டுத் தாபனம் என்பன விளங்கின.

இதேவேளை 1989இன் முதலரைப்பகுதியில் கூட்டுறவு நிறுவனங்களுக் கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 1988இன் இதே காலப்பகுதியின் ரூ. 5,660 இலட்சம் அல்லது 50.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 1,010 இலட்சத்தால் அல்லது 7.7 சதவீதத்தால் அதிகரித்தது. இந்த வீழ்ச்சியுற்ற தன்மை இரண்டு மீள்நிதியிடல் திட்டங்களிலும் காணப்பட்டது. அதாவது, முக்கியமாக சாதகமற்ற காலநிலை நிலைமைகளின் காரணமாக வேளாண்மை நடவடிக்கைகளில் வங்கிக் கொடுகடனின் பயன்பாட்டின் தணிந்த வேகத்தினைப் பிரதிபலிக்கும் வகையில், பயிர்ச்செய்கை கடனின் கீழும் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட கொடுகடன் வீழ்ச்சியுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார்துறையில் ஏனைய தனியார்துறைக் கூறுகள் 1989இன் முதலரைப்பகுதியில் ரூ. 4,040 இலட்சம் அல்லது 0.8 சதவீதங்கொண்ட அதி குறைந்த கொடுகடன் வளர்ச்சியினை பதிவுசெய்தன. இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூ. 28,830 இலட்சம் அல்லது 7.2 சதவீதமான அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. தனியார்துறை நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, நாட்டில் தொடர்ச்சியான அமைதியின்மையினுல் வங்கித்தொழில் பணிகள் குறைவடைந்தமை, யூனில் போக்குவரத்துத்துறையிலேற்பட்ட நீடித்த வேலை நிறுத்தம் என்பனவே இத்துறையின் வங்கிக் கொடுகடனுக்கான குறைந்த கேள்விக்குப் பொறுப்பான காரணிகளாகும்.

1989இன் முதலரைப்பகுதியில், சென்மதி நிலுவையின் சாதகமற்ற போக்குகள் வெளிநாட்டு வங்கிச் சொத்துக்களில் (தேறிய) குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை விளைவித்து பணநிரம்பலின்மீது சுருக்கத்தாக்கமொன்றை ஏற்படுத்தின. இக்காலப்பகுதியில் வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களின் (தேறிய) வீழ்ச்சி 1988இன் இதே காலப் பகுதியின் ரூ. 14,830 இலட்சம் அல்லது 16 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ. 54,560 இலட்சம் அல்லது 77.3 சதவீதமாக விளங்கியது. பகுப்பாய்வு செய்யப்படும் போது 1989இன் முதலரைப்பகுதியில் மத்திய வங்கியின் வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் (தேறிய) 1988இன் இதே காலப்பகுதியின் ரூ. 5,620 இலட்சம் அல்லது 9 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ. 68,590 இலட்சத்தால் அல்லது 159 சதவீதத்தினுல் வீழ்ச்சியுற்றன. இதேவேளை வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி வைப்புக்களும் (தேறிய) முன்னைய ஆண்டின் முதலரைப்பகுதியின் ரூ. 9,200 இலட்சம் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ. 14,030 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன.

(ஆ) வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மை

1989இன் முதலரைப்பகுதியில் பொதுவாக திரவத்தன்மை திருப்திகரமான மட்டத்தில் பேணப்பட்ட போதிலும் வர்த்தக வங்கித் தொழில்முறையின் திரவத்தன்மை நிலைமை சிறிதளவால் வீழ்ச்சியுற்றது. கேள்வி வைப்புக்களுக்கு திரவச் சொத்துக்களின் விகிதம் 1988இன் மாதச் சராசரியான 153 சதவீதத்திலிருந்து இக்காலப்பகுதியில் 146 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. எனினும் மொத்த வைப்புக்களுக்கு திரவச் சொத்துக்களின் மாதச் சராசரி விகிதம் 40 சதவீதத்திலிருந்து 41 சதவீதமாக இவ்விரு காலப்பகுதியில் சிறிதளவால் அதிகரித்தது.

1989இல் முக்கியமாகத் தனியார்துறைக் கொடுகடன் குறைவடைந்தமையின் காரணமாக வங்கிகளுக்கிடையான அழைப்புப் பணச்சந்தையின் நடவடிக்கைகளில் மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியில் குறைவான ஆர்வம் காணப்பட்டது. வங்கிகளுக்கிடையான அழைப்புப் பணச்சந்தை விகிதம் 1988 திசெம்பரின் 16.0 - 21.0 சதவீத வீச்சில் இருந்து 1989 ஏப்பிறலில் 3.0 - 17.0 சதவீத வீச்சிற்கு வீழ்ச்சியடைந்து மீண்டும் யூன் இறுதியில் 12.1 - 24.0 சதவீத வீச்சிற்கு அதிகரித்தது.

1989 சனவரியில் ரூ. 60,860 இலட்சத்திலிருந்து 1989 யூனில் ரூ. 35,440 இலட்சமாக வீழ்ச்சியுற்ற திறைசேரி உண்டியல்களில், வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்களின் முக்கியவீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வங்கியல்லா தனியார்துறை வைப்புக்களை திறைசேரி உண்டியல்களுக்கு மாற்றியதனுலும் வர்த்தக வங்கித் தொழில்முறையுடனுன அரச கூட்டுத்தாபன வைப்புக்களில் ஏற்பட்ட குறைப்பினுலும் திறைசேரி உண்டியல்களில் முதலிடுவதற்கான வர்த்தக வங்கியிடனுள்ள மூலவளங்களின் கிடைத்தல் தன்மை குறைவடைந்தது. மேலும் 1989 பெப்புருவரியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட உயர்ந்த இலாபம் தரும் நீண்டகால முதிர்ச்சியுள்ள உண்டியல்களைத் தொடர்ந்து குறுகியகால முதிர்ச்சியுள்ள உண்டியல்களின் இலாபம் குறைவடைந்தமை திறைசேரி உண்டியல்கள் மீதான வர்த்தக வங்கிகளின் கவர்ச்சித் தன்மையைக் குறைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 8.2

நாணய அளவீடு — 1989

ரூ. பத்து இலட்சம்

| விடயம் | உண்மையான 1988 டிசெம்பர் | உண்மையான 1989 யூன் | மதிப்பிடப்பட்ட 1989 டிசெம்பர் | மாற்றம் 1989 யூன்/1989 டிசெம்பர் மொத்தம் | மாற்றம் 1989 யூன்/1989 டிசெம்பர் சதவீதம் | மாற்றம் 1988 டிசெம்பர்/1989 டிசெம்பர் மொத்தம் | மாற்றம் 1988 டிசெம்பர்/1989 டிசெம்பர் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. உள்நாட்டுக் கொடுகடன் .. | 96,867 | 101,680 | 115,772 | 14,092 | 13.9 | 18,905 | 19.5 |
| 1.1. அரசு (தேறிய) | 36,065 | 37,609 | 43,865 | 6,256 | 16.6 | 7,800 | 21.6 |
| 1.2. தனியார்துறை .. | 60,802 | 64,071 | 71,907 | 7,836 | 12.2 | 11,105 | 18.3 |
| 1.2.1. கூட்டுத்தாபனங்கள் | 10,787 | 13,549 | 15,287 | 1,738 | 12.8 | 4,500 | 41.7 |
| 1.2.2. கூட்டுறவுகள் .. | 1,319 | 1,420 | 1,500 | 80 | 5.6 | 181 | 13.7 |
| 1.2.3. ஏனைய தனியார் | 48,697 | 49,102 | 55,120 | 6,018 | 12.3 | 6,423 | 13.2 |
| 2. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 7,058 | 1,602 | —1,409 | —3,011 | —187.9 | —8,467 | —120.0 |
| 3. நாணயக் கூட்டுக்கள் | | | | | | | |
| 3.1. குறுகிய பண நிரம்பல் (M1) | 32,379 | 32,037 | 37,732 | 5,695 | 17.8 | 5,353 | 16.5 |
| 3.1.1. நாணயம் .. | 18,487 | 18,367 | 21,783 | 3,416 | 18.6 | 3,296 | 17.8 |
| 3.1.2. கேள்வி வைப்புக்கள் | 13,892 | 13,670 | 15,949 | 2,279 | 16.7 | 2,057 | 14.8 |
| 3.2. தவணை சேமிப்பு வைப்புக்கள் | 35,567 | 37,680 | 40,066 | 2,385 | 6.3 | 4,499 | 12.6 |
| 3.3. விரிந்த பண நிரம்பல் (M2) | 67,946 | 69,717 | 77,798 | 8,081 | 11.6 | 9,852 | 14.5 |
| 4. ஏனையவிடயங்கள் (தேறிய) .. | —35,979 | —33,565 | —36,565 | —3,000 | | —586 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) நாணயக் கொள்கை

1988இல் நிலவிய பணவீக்கத் தாக்கங்களை கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கி 1989இன் முதலரைப்பகுதியில் கட்டுப்பாடான நாணயக் கொள்கையைத் தொடர்ந்தும் பின்பற்றியது. இது பெருமளவுக்கு தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மூலம் பொருளாதாரத்தின் மேலதிக திரவத் தன்மையை நீக்குவதினை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. மோசமடையும் சென்மதி நிலுவையினதும், விரிவடையும் உள்நாட்டுக் கொடுகடனினதும் பின்னணியில் கட்டுப்பாடான நாணயக் கொள்கை வழிமுறை 1989 யூனில் மூன்று புதிய கொடுகடன் கட்டுப்பாட்டு வழிமுறைகளை விதிப்பதன் மூலம் பலப்படுத்தப்பட்டது.

முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் வாராந்த ஏலவிற்பனைகள் தொடர்ந்து வந்ததுடன் அதன்மூலம் வர்த்தக வங்கிகளினதும் ஏனைய முதலீட்டாளர்களினதும் திரவ நிதியங்களுக்கு கிரமமான முதலீட்டு வழிமுறையொன்று வழங்கப்பட்டது. சந்தை விசைகளுக்கு ஏற்ப திறைசேரி உண்டியல்களின் மீதான இலாபம் வேறுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டது. இதனால் மூன்றுமாத உண்டியல்களின் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி இலாபம் 1988 இறுதியின் 19.8 சதவீதத்திலிருந்து 1989 பெப்புருவரியில் 20.23 சதவீதத்திற்கு அதிகரித்து அதன் பின்னர் 1989 யூன் அளவில் சிறு தளம்பல்களுடன் 16.58 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. 1989 பெப்புருவரியில் வழமையான 3 மாத திறைசேரி உண்டியல்களுக்கு மேலதிகமாக 6 மாத, 12 மாத முதிர்ச்சிக் காலங்களையுடைய உண்டியல்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. வேறுபட்ட முதிர்ச்சிக் காலங்களுடன் திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டமை முதலீட்டாளர்களுக்கு கூடியளவு விருப்பத் தெரிவுகளை அளிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது பணச்சந்தை மேலும் அபிவிருத்தியடைவதற்கும் வசதிசெய்துகொடுக்கும். இதனால் வங்கியல்லாத்துறையிடமுள்ள திறைசேரி உண்டியல்கள் முதலாந்தரச் சந்தைக் கொள்வனவுகளின் அடிப்படையில் 1988 இறுதியில் ரூ. 680 கோடியிலிருந்து 1989 யூன் இறுதியில் ரூ. 1,160 கோடிக்கு அதிகரித்தன. இது வங்கித் தொழில்முறையினால் கொள்வனவு செய்யப்படவேண்டிய புதிய திறைசேரி உண்டியல்களின் அளவைக்கட்டுப்படுத்த உதவியது.

இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையின் நடவடிக்கைகளைப் பொறுத்தளவில் மத்திய வங்கியிடமுள்ள திறைசேரி உண்டியல்களைக் குறைப்பதில் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இச்சந்தையின் கழிவு, மீள்கழிவு வீதங்கள் முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தையின் இலாபங்களின் அசைவுகளைப்பிரதிபலிக்கும் வகையில் சீராக்கப்பட்டன. 1989இன் முதலரைப்பகுதியில் கழிவு வீதங்கள் 12.5 சதவீதத்திலிருந்து 18.0 சதவீதமான வீச்சில் வேறுபட்ட வேளையில் மீள் கழிவு வீதங்கள் 17.5 சதவீதத்திலிருந்து 23.0 சதவீத வீச்சில் மாறுபட்டுக்காணப்பட்டன. முதலாந்தர சந்தை இலாபத்திலும் பார்க்க இச் சந்தையில் குறைவான கழிவு வீதம் திறைசேரி உண்டியல் சந்தையில் கோரல்களை முன்னேற்றுவதற்காகப் பேணப்பட்டவேளையில் இரண்டாந்தர சந்தையில் வங்கிக்கு ஏனைய வைத்திருப்பாளர்கள் மூலமான விற்பனைகளை ஊக்கமிழக்கச் செய்வதற்காக உயர்ந்த மீள்கழிவு வீதம் பயன்படுத்தப்பட்டது.

இச்சந்தைத் தொழிற்பாடுகளின் நடைமுறைப்படுத்தலைத் தொடர்ந்து மத்திய வங்கியல்லா மூலங்கள்வசமுள்ள திறைசேரி உண்டியல்களின் தொகை 1988 இறுதியின் ரூ. 1,140 கோடியிலிருந்து 1988 யூன் இறுதியில் ரூ. 1 440 கோடிக்கு அதிகரித்து, 26 சதவீதவளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதன்விளைவாக வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்களில் மத்திய வங்கியின் பங்கு இவ்விரு காலப்பகுதியிலும் 73 சதவீதத்திலிருந்து 68 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

மோசமடையும் வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலைமையினதும், விரிவடையும் உள்நாட்டுக் கொடுகடனினதும் நோக்கில் மத்திய வங்கி 1989 யூனில் மூன்று புதிய கொள்கை வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் கட்டுப்பாடான நாணயக் கொள்கைகளை மேலும் மீள் நடைமுறைப்படுத்தியது. அவையாவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) வங்கி வீதத்தின் மேன்னோக்கிய திருத்தம் (ஆ) தனியார்துறைக்கான வர்த்தக வங்கி கொடுகடன் மீது பகுதியளவான உச்சவரம்பு (இ) அத்தியாவசியமற்ற இறக்குமதிகளின் மீதான கொடுகடன் பத்திரங்களுக்கு எதிரான 100 சதவீத வரையறைத் தேவை என்பனவாகும்.

கிட்டிய எதிர்காலத்தில் கொடுகடனுக்கான கேள்வியைக் குறைப்பதற்கு வட்டி வீதங்கள் அசைய வேண்டிய திசைக்கான ஒரு அறிவிப்பை வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும்பொருட்டு 1989 யூனிலிருந்து வங்கிவீதம் 10 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக மேன்னோக்கி உயர்த்தப்பட்டது.

கொடுகடன் விரிவாக்கத்தை மேலும் தடுப்பதற்காக முன்னுரிமையல்லா துறைகளுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் மீது பகுதியளவான உச்சவரம்பொன்று விதிக்கப்பட்டது. இதன்கீழ் அரச கூட்டுத்தாபனங்களை உள்ளடக்கிய தனியார் துறைக்கான வர்த்தவங்கிகளின் மொத்தமுற்பணங்களின் வெளிநிற்கும் மட்டம் 1989 மே 31இன் மட்டத்திற்கு மேற்படக்கூடாதென அறிவுறுத்தப்பட்டது. எனினும் உற்பத்தி நோக்கங்களுக்குக் கிடைக்கத்தக்க கொடுகடன் இந்த உச்ச அளவினால் கட்டுப்படுத்தப்படவில்லை. இதன்படி வேளாண்மை (பயிர்ச்செய்கை, சந்தைப்படுத்தல் ஆகிய இரு கடன்களும்), ஏற்றுமதி வர்த்தகம் (கப்பற்படுத்தலுக்கு முன்னரும், கப்பற்படுத்தலுக்கு பின்னரும்), கைத்தொழில் ஆகியவற்றுக்கான கொடுகடன் வசதிகள் இந்த வரையறையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. மேலும் உற்பத்தியினதும் தொழில்நிலையினதும் உருவாக்கத்திற்காக குறிப்பிடப்பட்ட கொடுகடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட முற்பணங்கள், நீண்டகால கடன் வழங்கல் நிறுவனங்களுக்கான கடன்கள், அத்தியாவசிய உணவு இறக்குமதிகளுக்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கான கொடுகடன் வசதிகள் போன்றவையும் இக்கொடுகடன் எல்லையிலிருந்து விலக்களிக்கப்பட்டவையாகும். இந்நடவடிக்கைகளின் விளைவாக தனியார் கொடுகடனின் ஏறத்தாள 50 சதவீதம் மே இறுதியில் நிலவிய மட்டங்களிலேயே மாறுதிருந்தன. எனினும் தொடர்ச்சியான அமைதியின்மையினால் வர்த்தகர்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளின் நோக்கில் இவ்வரையறையானது கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மேற்கூறப்பட்ட வழிமுறைகளுக்கும் மேலாக, அத்தியாவசியமல்லாதவை எனக் கருதப்படும் சில தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதி விடயங்களின் மீதான கொடுகடன் பத்திரங்களுக்கு எதிராக 100 சதவீத வைப்பு வரையறையொன்றின் தேவை 1989 யூன் 15ஆம் நாளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வழிமுறை அத்தியாவசியமல்லா இறக்குமதிகளுக்கான கொடுகடனைச் சுருக்குவதன் மூலம் உள்நாட்டு கொடுகடன் விரிவாக்கத்தை குறைவடையச் செய்வதில் மட்டும் அல்லாது ஊக அடிப்படையிலான இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதன் மூலம்நாட்டின் மோசமடையும் சென்மதி நிலுவை நிலைமையைத் தடுப்பதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

1989இல் நாணய, சென்மதி நிலுவை நிலைமைகள் சுருக்கமான நாணய வழிமுறைகளைவேண்டி நின்றபோதிலும் மத்திய வங்கி உற்பத்தித்துறைகளுக்கு அதன் மீள்நிதியிடல் திட்டங்களினூடாக உதவிகளை வழங்குவதற்கு தொடர்ந்தும் கடமைப்பட்டிருந்தது. முன்னுரிமைத்துறைகளுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடலின் மொத்த வெளிநிற்கும் தொகை முதலரைப்பகுதியில் ரூ. 1,300 இலட்சத்தால் அதிகரித்து 1989 யூன் இறுதியில் ரூ. 37,400 இலட்சத்தை அடைந்தது. இவ்வதிகரிப்பு முக்கியமாக ரூ. 380 இலட்சத்தை ஏற்றுமதி மீள் நிதியிடலின் கீழும், பி.கி.அ. வங்கிகளை உள்ளடக்கிய வேளாண்மை கொடுகடனின் கீழ் ரூ. 440 இலட்சங்களையும், ரூ.900 இலட்சத்தை நடுத்தரநீண்டகாலக் கொடுகடன் திட்டத்தின் கீழும், உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழான ரூ. 490 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினையும் கொண்டிருந்தது. இடருக்குள்ளான நிலையிலுள்ள நிதிக்கூட்டு நிலையங்கள் தொடர்பாக வெளிநிற்கும் மீள்நிதியிடல் 1988 இறுதியின் ரூ.1,920 இலட்சத்திலிருந்து 1989 யூன் இறுதியில் ரூ. 3,540 இலட்சத்திற்கு அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (ஈ) வங்கிக்கிளை விரிவாக்கம்

1989இன் முதலரைப்பகுதியில் வர்த்தக வங்கிகள் அவற்றின் கிளைகளை விரிவாக்குவதில் அதிக தீவிரம் காட்டவில்லை. இலங்கை வங்கி, பேராதனையில்புதிய கிளையொன்றினைத் திறந்ததுடன், வீரகெட்டியவிலுள்ள வேளாண்மைப் பணி நிலையக்கிளையினை 'சி' தரத்திலுள்ள கிளையாக தரமுயர்த்தியும் வலஸ்கலவிலுள்ள கிளையினை மாத்தறைக் கடைத்தொகுதிக் கிளையுடனும் பேராதனை வளாகக் கிளையினை பேராதனை முதன்மைக் கிளையுடனும் மீளமைவும் செய்தது. இதேவேளை ஒப்பாதவிலுள்ள வேளாண்மைப் பணிநிலைய கிளை நெலுவக் கிளையுடன் மீளமைவு செய்யப்பட்டது. பியகமை சுதந்திர வர்த்தக வலயத்தில் புதிய விரிவாக்க அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப் பட்டதுடன் சாலியா அசோகபுரவிலுள்ள விரிவாக்க அலுவலகம் கல்கமுவ கிளையுடன் மீளமைவு செய்யப்பட்டது. மேற்கூறப்பட்ட மாற்றங்கள் இலங்கை வங்கியின் முதன்மைக் கிளைகளினதும் விரிவாக்க அலுவலகங்களினதும் எண்ணிக்கையை மாற்றாது இருந்த வேளையில் வேளாண்மைப் பணிநிலைய கிளைகளின் எண்ணிக்கையை 2ஆல் 345ஆகக் குறைத்தன.

மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியில் கம்பகா மாவட்டத்தில் பமுனுகமுவ என்னும் இடத்தில் மக்கள்வங்கி புதிய கிளையொன்றினைத் திறந்துஅதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கையை 299ஆக உயர்த்தியது. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியும் அதன் கிளை அமைப்பை கிரிபத்கொட, கொழும்புக் கோட்டை, பம்பலப்பிட்டி ஆகிய இடங்களில் மூன்று புதிய கிளைகளைத் திறந்ததன் மூலம் விரிவுபடுத்தியது. இது வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் கிளைகளின் எண்ணிக்கையை 1989 யூன் இறுதியளவில் 7 ஆக உயர்த்தியது. இதேவேளை வரையறுக்கப்பட்ட சேலான் ரஸ்ட் வங்கி மாத்தறையிலுள்ள இந்தியன் ஓவசீஸ் வங்கிக் கிளையினை பொறுப்பேற்றதன் மூலம் அதன் கிளைகளின் எண்ணிக்கையை 2ஆக உயர்த்தியது. மேற்கூறப்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து 1989 யூன் இறுதியில் வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை (வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள், விரிவாக்க அலுவலகங்கள், கச்சேரிக் கிளைகள், கொடுப்பனவு அலுவலகங்கள், வெளிநாட்டுக் கிளைகள் என்பனவற்றை உள்ளடக்கி ஆனால் முதன்மைக் கிளைகளின் விரிவாக்க அலுவலகங்களாக தொழிற்படுவதற்காக மீளமைவு செய்யப்பட்ட வேளாண்மைப் பணி நிலையங்கள் நீங்கலாக) 702ஆக உயர்ந்தது.

1989இன் முதலரைப்பகுதியில் புதிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் எதுவும் திறக்கப்படவில்லை. எனினும் ஏற்கனவேயுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளில் 4 அவற்றின் கிளை அமைப்பினை விரிவாக்கின. கேகாலையிலும், காலியிலும் உள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிளையினைத் திறந்த வேளையில் நுவரெலியாவிலும் மொனறாகலையிலும் உள்ளபிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒவ்வொன்றும் இரு கிளைகளைத் திறந்தன. இதனைத் தொடர்ந்து 1989 யூன் இறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் தொழிற்படும் மொத்தக் கிளைகளின் எண்ணிக்கை (தலைமை அலுவலகக் கிளைகள் உட்பட) 86ஆக விளங்கியது.

### (உ) முகவர் வங்கித் தொழில்

இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் 1988 ஒற்றோபரில் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் முகவர் வங்கித்தொழிலின் முன்னேற்றத்திற்கான முன்னோடியாக தங்கள் நடவடிக்கைகளை மக்கள் கடன் முன்னோடித் திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் மேற்கொண்டன. 1989 யூன் இறுதியில் இலங்கை வங்கியாலும், மக்கள் வங்கியாலும் இத்திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட முகவர்களின் மொத்த எண்ணிக்கை முறையே 1,507 ஆகவும் 2,272 ஆகவும் விளங்கியது. இதேவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியும் பரீட்சார்த்த அடிப்படையில் 1989 சனவரியில் சம்பத் தொழில் வழங்குனர் திட்டமென அழைக்கப்படும் புதிய திட்டமொன்றைத் தொடங்கியது. முகவர்களுக்கூடாக சேமிப்புக்களை திரட்டுவதற்கு சேமிப்புப் பத்திரம் ஒன்றை அறிமுகப்படுத்தியதால் இது இரண்டு அரச வங்கிகளாலும் தொடங்கப்பட்ட திட்டங்களிலிருந்து வேறுபட்டதாகும். 1989 யூன் இறுதிவரை இத்திட்டத்தில் 29 முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**(ஊ) 1988இன் எண் 30 கொண்ட வங்கித்தொழில் சட்டத்தின் கீழான தீர்மானங்களும், பணிப்புரைகளும்.**

1988இன் எண் 30 கொண்ட வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் நாணயச் சபையினுல் செய்யப்பட்ட முதல் தொகுதி தீர்மானங்கள் வர்த்தக வங்கிகளுக்கு 1989 மாச்சில்வழங்கப்பட்டன. இத்தீர்மானங்கள் வர்த்தக வங்கிகளின் உரிமைக் கட்டணங்கள், மூலதன அமைப்பும் தேவைகளும், திரவத்தன்மைத் தேவை விகிதங்கள், பணிப்பாளர்களுக்கு அல்லது அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு அல்லது இவ்வகைப் பணிப்பாளர்கள் கணிசமான உரிமையைக் கொண்டிருக்கும் வியாபார நிறுவனங்களுக்கு கடன்வழங்கும்போது பெறப்பட வேண்டிய பிணைகள் என்பனதொடர்பானவையாக இருந்தன. மேலும் இக்காலத்தில் இதே திட்டத்தின் கீழ் தனியான வாடிக்கையாளர் கடன் வசதிகள் மீதான எல்லைகள் தொடர்பாக மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு பணிப்புரைகளை வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் பிரிண்டர்ஸ் லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org